Registered as a news paper.

இலவசப் பிரதி

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து
SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.
ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமேந்து
ராம்கோ
(சி-653)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 மாசி 28 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 முஹறம் 08 (12.03.2003) புதன்கிழமை இதழ் :160

# கப்பல் அழிப்பு மிகப் பாரதூரமான சம்பவம்;

# மக்களுக்காக பொறுமை காக்கின்றோம்!

## ஆனால் அதற்குமே எல்லையுண்டு; அன்ரன் பாலசிங்கம் அறிவிப்பு!



(கிளிநொச்சி)

**சர்வதேசக் கடற்பரப்பில் புலிகளின் கப்பல் தாக்கியழிக்கப்பட்ட சம்பவம் எம்மைப் பொறுத்தளவில் பாரதூரமான யுத்தநிறுத்த மீறல் சம்பவமாகும். எனினும், எமது மக்களின் சமாதான வாழ்விற்காக பொறுமை காக்கின்றோம். இவ்வாறு விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் கிளிநொச்சியில் தமிழீழ நீதிமன்ற வளாகத்தை நேற்றுத் திறந்து வைத்து ஆற்றிய நீண்ட உரையில் குறிப்பிட்டார்.**

**அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,**

இன்றைய அரசியல் நிலைமை பற்றியும் பேச்சுவார்த்தைகள் பற்றியும் விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு பற்றியும் உங்களுக்கு எடுத்து விளக்க ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

**கப்பலுக்கு நடந்தது என்ன?**

நேற்று (நேற்றுமுன்தினம்) திருகோணமலையிலிருந்து 220 கடல்மைல் தூரத்தில், அதாவது சர்வதேசக் கடற்பரப்பில் ஓர் துயரமான சம்பவம் நிகழ்ந்தது. இவற்றை நீங்கள் பத்திரிகைகள் மூலம் அறிந்திருப்பீர்கள். கடந்த ஓராண்டு போர்நிறுத்த காலத்தில் நடந்த மிகவும் மோசமான யுத்தநிறுத்த மீறலாக இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. இந்தச் சம்பவம் குறித்து எமது இயக்கத் தலைமை மிகுந்த ஆழமான கவலையும், அதிருப்தியும் அடைந்திருப்பதுடன் அரசாங்கத்திற்கு எமது ஆழமான அதிருப்தியைத் தெரிவித்துள்ளது. இந்தச் சம்பவம் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்றும் விடுதலைப் புலிகள் இயக்கம் அரசாங்கத்தை எச்சரிக்கை செய்திருக்கிறது.

இந்த நிகழ்வு பற்றியும் இதனால் ஏற்படக்கூடிய நிலைமைகள் பற்றியும் முதலில் நான் எடுத்துக்கூற விரும்புகிறேன்.

உங்களுக்குத் தெரியும், விடுதலைப்புலிகள் இயக்கம் ஒரு வர்த்தகக் கப்பல் சேவையை நடத்தி வருகிறது. கடந்த பதினைந்து ஆண்டுகளாக தென்னாசியாவில், தென்கிழக்காசியாவில் எமது கப்பல் போக்குவரத்துக்கள், வர்த்தக சேவைகள் நடைபெற்று வருகின்றன என்பது ஒரு இரகசியமான விடயமல்ல. வர்த்தக நோக்கத்திற்காக நாம் நீண்டகாலமாகவே ஒரு கப்பல் சேவையை நடாத்தி வருகிறோம். பல கப்பல் நிறுவனங்கள் எமக்குச் சொந்தமாக உள்ளன. பல கப்பல்கள் இப்பொழுதும் சேவையில் ஈடுபட்டுவருகின்றன. இப்படியானதொரு வர்த்தகக் கப்பல் 220 கடல்மைல் தொலைவில் சர்வதேசக் கடற்பரப்பில் தடுத்து நிறுத்தப்பட்டது. அப்போது எங்களுக்குத் தகவல் அறிவிக்கப்பட்டது. எப்படியென்றால், எமது கப்பலை நிறுத்தி கடற்படையினர் அங்கு வந்து பரிசோதனை செய்ய வேண்டுமென்று அந்தக் கப்பலைத் திருப்பி, சிறிலங்கா கடற்பிரதேசத்துக்குள் கொண்டு செல்வதற்கான முயற்சிகள் எடுக்கப்படுவதாக எமக்குத் தகவல் தரப்பட்டது. அப்பொழுது தலைவர் பிரபாகரன் அவர்கள் என்னிடம் வந்து- இலங்கை அரசாங்கத்துடனும், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுடனும் தொடர்புகொண்டு இந்தப் பிரச்சினையை உடனடியாகத் தீர்க்கும்படி கேட்டுக்கொண்டார். ஏனெனில், எந்தவகையிலும் நாம் ஓர் சட்டவிரோதமான செயலில் ஈடுபடவில்லை. எமது வர்த்தகக் கப்பல், அதாவது சட்டபூர்வமாக பதிவு செய்யப்பட்ட ஓர் வர்த்தகக் கப்பல் சர்வதேசக் கடற்பரப்பில் சென்று கொண்டிருந்தது. இதைத் தடுப்பதற்கு சிறிலங்கா கடற்படைக்கு எதுவிதமான சட்டபூர்வமான அதிகாரமும் இல்லை. இதனை உடனடியாக அவர்களுக்குச் சொல்லுங்கள் என்று கேட்டுக்கொண்டார்.

அதன்பிரகாரம் கண்காணிப்புக்குழுவின் புதிய தலைவர் ரெலவ்சனுடன் தொடர்புகொண்டு, அவருடன் நான் கதைத்தேன். அப்போது கடற்படையினரால் அவருக்கு ஏற்கனவே ஓர் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதாவது விடுதலைப்புலிகளின் கப்பலொன்று 220 கடல் மைல்களுக்கு அப்பால் எம்மால் தடுத்து நிறுத்தப்பட்டு விசாரித்து வருகின்றோம் என்று கூறப்பட்டிருந்தது.

நாம் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கு நிலைமையை விளக்கினோம். இது சர்வதேசக் கடற்பரப்பு. இதில் எந்தக் கப்பலும் சுதந்திரமாக நடமாடும் உரிமையுண்டு. ஆகவே இலங்கைக் கடற்படை இதில் தலையிடுவது சட்டவிரோதமானது என்று அவர்களிடம் சொன்னேன். அவரும் எமது நியாயப்பாட்டை ஏற்றுக் கொண்டார். நீங்கள் ஒன்றிற்கும் யோசிக்க வேண்டாம். நாம் இலங்கைக் கடற்படைத்தளபதியுடனும் இலங்கை அரசாங்கத்துடனும் தொடர்பு (2 ஆம் பக்கம் பார்க்க)

## உயிரிழந்த 11 போராளிகளும் மிகவும் பெறுமதியானவர்கள்!

### செய்தியாளர்களிடம் அன்ரன் பாலசிங்கம் தெரிவிப்பு

விடுதலைப் புலிகளின் கப்பல் தாக்கப்பட்டது ஒரு பாரதூரமான சம்பவமாகத் தலைமைப்பீடம் பார்த்துள்ளது. ஏனெனில், தாக்கப்பட்ட கப்பலை விட அதில் உயிர் நீத்தவர்கள் முக்கியமான போராளிகள் எனப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இவர்கள் கடற்பயணத்தில் நீண்டகால அனுபவம்பெற்ற போராளிகள். தலைவர் அவர்கள் இவர்களது இழப்பால் வேதனையடைந்துள்ளார். அத்தோடு, தொடர்ச்சியாக நாங்கள் உயிரிழப்பைச் சந்திக்கமுடியாது. ஒரு சட்டவிரோத சம்பவத்தோடு இணைந்த பிரச்சினை என்றால் அதையும் பொறுத்துக்கொள்ளலாம். இது சர்வதேச கடற்பரப்பில் 220 மைலுக்கு அப்பால் நடந்த ஒரு சம்பவம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

## விண்ணாணம் விநாசியர்



புரிந்துணர்வெண்டால் பொறுமையைச் சோதிக்கிறது எண்டு கொழும்பு நினைக்குதோ...?

## தமிழீழ நீதிமன்ற வளாகம் கிளிநொச்சியில் திறப்பு



கிளிநொச்சியில் தமிழீழ நீதிமன்ற வளாகத்தினை விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவ ஆசிரியருமான அன்ரன் பாலசிங்கம் நேற்று திறந்து வைத்தார்.

நேற்றுக் காலை பத்து மணியளவில், தமிழீழ நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

முதன்மைச் சுடரினை தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஏற்றிவைத்தார். தமிழீழத் தேசியக்கொடியினை தமிழீழ கா்வற்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் ஏற்றிவைத்தார்.

இதனைத் தொடர்ந்து தமிழீழ நீதிமன்றப் பெயர்ப்பலகையை தமிழீழ நிதித்துறைப் பொறுப்பாளர் தமிழ்க்குமரன் (10 ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்கத் தூதுவர் நேற்று யாழ். விஜயம்



இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஆஷ்லி வில்ஸ் தலைமையிலான உயர்மட்டக்குழுவினர், உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று யாழ்ப்பாணம் வந்தனர்.

யாழ். குடாநாட்டு நிலைமைகள் தொடர்பாகப் பல்வேறு தரப்பினரையும் சந்தித்துக் கேட்டறிந்தனர்.

நேற்று நண்பகல் யாழ்ப்பாணம் வந்த இக்குழுவினர், 12.40 மணியளவில் யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்துக் குடாநாட்டு நிலைமைகள் தொடர்பாகக் கேட்டறிந்தனர்.

இச்சந்திப்பின்போது, குடாநாட்டு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், இராணுவ உயர்பாதுகாப்பு வலயங்களினால் மக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள், புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் குடாநாட்டு நிலைமைகள் தொடர்பாக விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

இச்சந்திப்பின்போது, அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதியான பரமநாதன், விக்கினேஸ்வரன், அருட்தந்தை பேனாட், மகளிர் அபிவிருத்தி (10 ஆம் பக்கம் பார்க்க)

## ஆசிரியர்கள் நகரில் பேரணி



தமிழர் ஆசிரியர் சங்கமும், தொண்டர் ஆசிரியர் சங்கமும் இணைந்து சில கோரிக்கைகளை முன்வைத்து நேற்று ஒருநாள் அடையாள வேலைநிறுத்தத்திலும், அமைதிப் பேரணியிலும் ஈடுபட்டனர்.

நேற்றுக்காலை 10.30 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் ஆரம்பித்த பேரணி, முனீஸ்வரன் கோவில் வீதி ஊடாக ஆஸ்பத்திரி வீதியையடைந்து, அங்கிருந்து கண்டி வீதியூடாக காலை 11.45 மணிக்கு யாழ். செயலகத்தை அடைந்தது.

அமைதிப்பேரணியில் தொண்டர் ஆசிரியர்கள், தமிழ் ஆசிரியர் சங்க ஆசிரியர்கள், வேலையற்ற பட்டதாரிகள் என ஆயிரக்கணக்கானோர் (10 ஆம் பக்கம் பார்க்க)

SERENDIB AIRLINE

யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்

021-2223916, 0777-517019, 01-505632, 074-612656, 01-390128.

(சி-626)

# BATTLE OF THE NORTH (97TH- ENCOUNTER)

## எதிர்வரும் வெள்ளியன்றும் - சனியன்றும் குடாநாட்டை அதிரவைக்க வருகிறது

### யாழ். மத்திய கல்லூரி



*அமர்ந்திருப்போர்.:-* (இ-வலமாக) திரு. வீ.எஸ்.மகேந்திரன் (விளையாட்டு முதல்வர்), ஆர்.மதுசன் (உப தலைவர்), வி.ரஜீவ்குமார் (அணித் தலைவர்), திரு.கே.இராசதுரை (அதிபர்), எஸ்.கார்த்தீபன், திரு.எஸ்.காண்டீபன் (பயிற்றுநர்), திரு.ஈ.எப்.ஆர்.ஜெயக்குமார் (விளையாட்டுப் பொறுப்பாளர்)

*நடுவரிசை:-* (இ-வலமாக) கே.கார்த்திக் , எஸ்.துஷாந்தன், ரி.தினேஷ், எஸ்.விமலகாந்த், ஆர்.சிவகுமார், ஏ.தூரன், கே.றொகான், ஏ.ஜசிந்தன்.

*பின்வரிசை:-* (இ-வலமாக) வி.கபில்தேவ், எம்.ஜசோதரன், பி.கஜன், கே.கலிஸ்ரன், எஸ்.வாகீசன், எஸ்.சுரேஸ்ராஜா.

*வீ.ரஜீவ்குமார்* - இடதுகை ஆரம்பப் பந்து வீச்சாளர். இடதுகைத் துடுப்பாட்ட வீரர். 2001 இல் 17 வயதிற்குட்பட்ட யாழ்.பாடசாலைகள் அணியின் தலைவர். சகலதுறை ஆட்டக்காரர் அணித் தலைவர்.

*ஆர்.மதுசன்* - ஒரு சகலதுறை ஆட்டக்காரர், சுழற்பந்து வீச்சாளர், அணியின் உப தலைவர், எந்த வரிசையிலும் துடுப்பெடுத்தாடும் வல்லமை.

*எஸ்.கார்த்தீபன்* - 1999 BIG MATCH ஆட்ட நாயகன், வேகமாக அடித்து ஆடுபவர், துணை விக்கெட் காப்பாளர்.

*கே.றொகான்* - யாழ். பாடசாலைகள் 19 வயதிற்குட்பட்ட அணித் தலைவர், ஆரம்பத் துடுப்பாட்ட வீரர், 19 வயதிற்குட்பட்ட இலங்கை அணி CRICKET POLL அங்கத்தவர்.

*கே.கார்த்திக்* - வேகமாக அடித்தாடக்கூடிய ஆரம்பவரிசை ஆட்டக்காரர், இப்பருவத்தில் குறிப்பிடத்தக்க ஓட்டங்கள் எடுத்தவர், நல்லதொரு புறக்கள FIELDER, மிதவேகப் பந்து வீச்சாளர்.

*எஸ்.துஷாந்தன்* - எந்தப் புறக்கள நிலையிலும் FIELDING செய்யும் திறமை கொண்டவர், ஆரம்பத் துடுப்பாட்டவீரர்.

*எஸ்.விமல்காந்* - அணியின் வலதுகை ஆரம்பப் பந்துவீச்சாளர், அதிரடி இடதுகைத் துடுப்பாட்டவீரர், 2002 BIG MATCH ஆட்ட நாயகன்.

*ஏ.ஜசிந்தன்* - அண்மைக் களத்தடுப்பில் சிறந்தவர், சகலதுறை ஆட்டக்காரர், நான்காம் இலக்கத் துடுப்பாட்டவீரர்.

*ஆர்.சிவகுமார்* - ஆரம்பப் பந்துவீச்சாளர், 2002 BIG MATCH இல் சிறந்த பந்துவீச்சாளர், எந்த நிலையிலும் களத்தடுப்புச் செய்யும் ஆற்றல் மிக்கவர்.

*ஏ.தூரன்* - அணியின் விக்கெட் காப்பாளர், மத்திய வரிசை அதிரடி ஆட்டக்காரர்.

*ரி.தினேஷ்* - OFF SPINNER, நீண்ட நேரம் களத்தில் நின்று துடுப்பாடும் திறமை.

*வி.கபில்தேவ்* - மத்திய வரிசை துடுப்பாட்டம், சிறந்த களத்தடுப்பு, மிதவேகப் பந்துவீச்சு.

*கே.கலிஸ்ரன்* - அணிக்கு அறிமுகம், விக்கெட் காக்கும் திறமை, சிறந்ததொரு களத்தடுப்பாளர்.

*எம்.ஜசோதரன்* - அணிக்கு அறிமுகம், மிதவேகப் பந்துவீச்சு, புறக்களச் சிறந்த FIELDER.

*எஸ்.சுரேஸ்ராஜா* - அணிக்கு அறிமுகம், வலதுகை மத்திய வரிசைத் துடுப்பாட்டம், வேகமான ஓட்டம் குவிப்பவர், எந்த நிலையிலும் நல்ல களத்தடுப்பாளர், சிறந்ததொரு சகலதுறை ஆட்டக்காரர்.

*பி.கஜன்* - அணிக்கு அறிமுகம், மிதவேகப் பந்துவீச்சு, ஆரம்பப் பந்துவீச்சாளராகத் திகழ்பவர்.

*எஸ்.வாகீசன்* - அணிக்கு அறிமுகம், வலதுகைத் துடுப்பாட்டம். OFF SPINNER சிறந்த களத்தடுப்பாளர்.

### பரி.யோவான் கல்லூரி



*அமர்ந்திருப்போர்.:-* (இ-வலமாக) திரு. கே.எஸ்.முகுந்தன் (பயிற்றுநர், பொறுப்பாசிரியர்), பி.லவேந்திரா, சி.அகிலன் (அணித்தலைவர்), திரு.எஸ்.தனபாலன் (அதிபர்), ஈ.எஸ்.வில்சன் (உபதலைவர்), ஏ.தனஞ்சயன், திரு.வி.எஸ்.பி.துசிதரன் (விளையாட்டுப் பொறுப்பாசிரியர்)

*நடுவரிசை:-* (இ-வலமாக) ரி.மதன்ராஜ், ரி.சி.அன்ரூ, ஆர்.பிரதீசன், எம்.மயூரன், எஸ்.கிருஷ்ணகுமார், எஸ்.ரஜீவன்.

*பின்வரிசை:-* (இ-வலமாக) சி.எம்.டினேஸ், பி.சஞ்சயன், எஸ்.சுதன், ஏ.அன்புஜன், பி.சஜிந்தன்.

*சி.அகிலன்* - அணித்தலைவர், ஆரம்ப வலதுகைப் பந்துவீச்சாளர், வலதுகைத் துடுப்பாட்ட வீரர், கீழ்வரிசை கனதியான துடுப்பாட்டம், 19 வயதிற்குட்பட்ட யாழ். பாடசாலை அணியின் அங்கத்தவர் (2002).

*ஈ.எஸ்.வில்சன்* - உபதலைவர், வலதுகை ஆரம்பத்துடுப்பாட்ட வீரர், தேவையாயின் விக்கெட் காப்புக் கடமையும் செய்வார், SLIPS பகுதிகளில் சிறந்த களத்தடுப்பு.

*பி.லவேந்திரா* - கடந்த வருட அணித் தலைவர், இடதுகை கடும்போக்குத் துடுப்பாட்டம், அணிக்கு சதம் பெற்றுக்கொடுத்த ஒரே ஒருவர், 19 வயதிற்குட்பட்ட யாழ். பாடசாலைகள் அணியின் தலைவர் (2002), பாட்டா ஒப் சேர்வர் SCHOOL BOY CRICKETER OF NORTH 2002.

*ஏ.தனஞ்சயன்* - வலதுகை மத்திய வரிசைத் துடுப்பாட்ட வீரர், வேகமாக ரன் குவிப்பார், சுழற்பந்து வீச்சாளர், சகலதுறை ஆட்டக்காரர்.

*எஸ்.கிருஷ்ணகுமார்* - வலதுகை ஆரம்பத் துடுப்பாட்ட வீரர், OFF SPINNER, சிறந்த களத் தடுப்பாளர்.

*ரி.சி.அன்ரூ* - வலதுகை மிதவேகப் பந்து வீச்சு, புறக்கள சிறந்த களத்தடுப்பு, பின்வரிசையில் ரன் சேர்க்கும் ஆற்றல்.

*எஸ்.ரஜீவன்* - வலதுகை மத்தியவரிசைத் துடுப்பாட்டம், GULLYஇல் சிறந்த களத்தடுப்பு, தேவையாயின் பந்து வீசுவார்.

*ரி.மதன்ராஜ்* - வலதுகைத் துடுப்பாட்ட வீரர், இடதுகை மிதவேகப் பந்துவீச்சு, சகலதுறை ஆட்டக்காரர், எந்நிலையிலும் களத்தடுப்புச் செய்யும் திறமை.

*சி.எம்.டினேஸ்* - நம்பகமான வலதுகைத் துடுப்பாட்ட வீரர், தன்னை நன்கு வளர்த்துக் கொண்ட விக்கெட் காப்பாளர்.

*ஆர்.பிரதீசன்* - அணிக்கு அறிமுகம், நம்பகமான வலதுகைத் துடுப்பாட்ட வீரர், புறக்களக் களத்தடுப்பில் மிகத்திறமை, சகலதுறை விளையாட்டு வீரர்.

*எம்.மயூரன்* - அணிக்கு அறிமுகம், ஆரம்பப் பந்து வீச்சாளர், பின்வரிசைத் துடுப்பாட்டத் திறமை, சிறந்த களத்தடுப்பாளர்.

*ஏ.அன்புஜன்* - வலதுகைத் துடுப்பாட்ட வீரர், சிறந்த புறக்களத் தடுப்பாளர், தேவையைப் பொறுத்து அணியின் மிதவேகப் பந்து வீச்சாளர்.

*பி.சஜிந்தன்* - அணிக்கு அறிமுகம், BABY OF THE SIDE, வலதுகைத் துடுப்பாட்ட வீரர், திறமையான விக்கெட் காப்பாளர்.

*பி.சஞ்சயன்* - அணிக்கு அறிமுகம், வலதுகைத் துடுப்பாட்ட வீரர், மிதவேகப் பந்துவீச்சு. புறக்கள சிறந்த களத்தடுப்பாளர்.

*எஸ்.சுதன்* - அணிக்கு அறிமுகம், வலதுகை OFF SPINNER, வலதுகைத் துடுப்பாட்ட வீரர், சிறந்த களத்தடுப்பாளர்.

# கப்பல் அழிப்பு மிகப் பாரதூரமான...

கொண்டு இந்தப் பிரச்சினையை சுமுகமாகத் தீர்க்கிறேன் என்று எமக்கு உறுதியளித்தார்.

அப்போது நான் திரு.பிரபாகரனிடம் சொன்னேன். பிரச்சினை வராது, பிரச்சினை வராமல் பார்த்துக்கொள்வதாகக் கண்காணிப்புக்குழுத் தலைவர் உறுதிமொழி தந்துள்ளார் என்று சொன்னேன். அப்பொழுது என்ன நடவடிக்கை எடுக்கப்படுவதென பிரபாகரன் அவர்களும், தமிழ்ச்செல்வன் அவர்களும், நானும் பொறுமையாகப் பார்த்துக் கொண்டிருந்தோம். ஆனால், ஒரு மணித்தியாலத்தின் பின் எமது கடற்புலிகளின் தலைமையகத்திலிருந்து ஒரு தகவல் கிடைத்தது. எமது கப்பல் மீது சிறிலங்கா போர்க்கப்பல் தாக்குதலை நடாத்துவதாகவும் எமது கப்பல் நடு சமுத்திரத்தில் பற்றி எரிவதாகவும் எமது போராளிகள் செத்து மடிந்து கொண்டிருப்பதாகவும் ஒரு தகவல் வந்தது.

சிறிதுநேரத்தில் கப்பல் தீப்பற்றி எரிந்து மூழ்கிவிட்டது. அதிலிருந்த பதினொரு போராளிகள் இறந்து போனார்கள். இதற்குப் பின்னர் நாங்கள் கண்காணிப்புக்குழுவுடன் தொடர்பு கொள்ளவில்லை. நாங்கள் இச்சம்பவத்தை கடுமையாக ஆட்சேபித்து அறிக்கை விட்டிருந்தோம். நீங்கள் பத்திரிகைகளில் பார்த்திருப்பீர்கள். அந்த அறிக்கையில் - இச்சம்பவம் சட்டவிரோதமானது, போர்நிறுத்த நியமங்களை மிக மோசமாக மீறுவதாக அமைந்துவிட்டது, இந்தச் சம்பவம் எமது சமாதான பேச்சுவார்த்தைகளில் மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்துமென நாம் அறிக்கையில் தெரிவித்துள்ளோம்.

**பொறுமையாக நிதானத்தை கடைப்பிடிக்கின்றோம்.**

இது சமீபத்தில் நடந்த நிகழ்வு. உங்களுக்குத் தெரியும்- கடந்த ஒரு வருடமாக எத்தனையோ சவால்கள் மத்தியில், எத்தனையோ முட்டுக்கட்டைகள் மத்தியில், எத்தனையோ ஆத்திரமூட்டும் சம்பவங்கள் மத்தியில்- நாம் பொறுமையுடன் நிதானமிழக்காமல் இந்தப் போர்நிறுத்தத்தைப் பேணி வருகின்றோம் என்ற யதார்த்த உண்மையை நீங்கள் அறிவீர்கள்.

விடுதலைப் புலிகள் இயக்கம் காலங்காலமாக போர் நிறுத்தம், பேச்சு வார்த்தைகள் என்று இறங்கிய போதெல்லாம், சிறிலங்கா அரசும் உலகமும் எம்மை, அதாவது இந்தப் பேச்சுவார்த்தையைப் புலிகள் குழப்புகின்றார்கள். புலிகளுக்கு அமைதிச் சூழ்நிலையில் நம்பிக்கையில்லை, போர்நிறுத்தத்தில் நம்பிக்கையில்லை. இவர்கள் அமைதி வழியில் தமிழரின் தேசிய பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண்பதில் இவர்களுக்கு உண்மையான பற்றுறுதி இல்லை என்றெல்லாம் காலங்காலமெல்லாம் எம்மீது குற்றஞ்சாட்டி வந்தது.

ஆனால், இன்று நாங்கள் உலகத்திற்கும் குறிப்பாக சிங்கள தேசத்திற்கும், நாங்கள் உண்மையில் சமாதானத்தில் நம்பிக்கை கொண்டவர்கள், நாம் உண்மையில் சமாதான வழி மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண விரும்புகின்றோம் என்பதை எடுத்துக்காட்ட வேண்டும் என்பதில், இந்த கடந்த ஓர் ஆண்டாக மிகவும் உறுதியாக, மிகவும் நிதானமாக செயற்பட்டு வந்திருக்கின்றோம். இதற்கிடையில் பல சம்பவங்கள் நடந்திருக்கின்றன. சமீபகாலமாக இராணுவம், குறிப்பாக கடற்படையினர் ஆத்திரமூட்டும் செயல்களில் ஈடுபட்டுவருகிறார்கள். அம்பாறையில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தில் ஒன்பது பொதுமக்கள் கொல்லப்பட்டார்கள். அப்பொழுதும் நாம் அமைதியைக் காத்தோம். நெடுந்தீவுக் கடற்பரப்பில் எமது மீன்பிடிப் படகு தாக்கப்பட்டு, அழிக்கப்பட்டு, அதில் மூன்று போராளிகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்கள். அதற்குப் பின் மானிப்பாயில் எமது பெண் போராளிகள், மிகவும் மிருகத்தனமான முறையில் தாக்கப்பட்டனர். அப்பொழுதும் நாம் பொறுமையாக அமைதியைப் பேணினோம். இப்பொழுது நேற்றும் (நேற்றுமுன்தினம்) 11 போராளிகள் கொல்லப்பட்டனர். இப்பொழுதும் நாங்கள் அமைதியாக இருக்கின்றோம்.

இந்தச் சம்பவத்தை வைத்துக் கொண்டு நாங்கள் போருக்குப்போகத் தயாராக இல்லை. பொறுமையாக இருக்கிறோம். எந்தளவிற்கு எந்தளவு பொறுமையைக் காக்க முடியுமோ, அந்தளவிற்கு அந்தளவு பொறுமையைக் காப்போம். ஆனால், எமது பக்கம் நியாயம் உண்டு என்பதை உலகிற்கு உணர்த்த முயற்சிப்போம்.

**இராணுவச் சமநிலையைப் பேணுவது அவசியம்**

விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கடத்த முனைகிறார்கள் என்ற குற்றச்சாட்டு ஒன்று முன்வைக்கப்பட்டிருக்கிறது. தயவுசெய்து கேட்டுக்கொள்ளுங்கள், போர்நிறுத்த உடன்பாட்டின்படி இருதரப்பும் இராணுவச் சமநிலையைப் பேணவேண்டும். இதை நான் சொல்லவில்லை. கண்காணிப்புக்குழுவின் தலைவர் சொல்லுகிறார்.

இராணுவச் சமநிலை எப்படிப் பேணப்படுகின்றது? நாங்கள் ஆயுதங்களை இறக்க இயலாது. நாங்கள் ஆயுதங்களுடன் நடமாடமுடியாது. ஒரு இடத்தில் இருந்து இன்னோர் இடத்துக்கு ஆயுதங்களைக் கொண்டு போக முடியாது. கடலில் சுதந்திரமாக நடமாடமுடியாது.

ஆனால், சிறிலங்கா அரசினது பாதுகாப்புச் செலவினம் குறைக்கப்படவில்லை. 5 ஆயிரம் கோடி ரூபா ஆயுதக் கொள்வனவுக்குச் செலவழிக்கப்பட்டுள்ளது. கடந்த ஒரு வருடமாக சிறிலங்கா இரர்ணுவம் நவீனமயப்படுத்தப்பட்டு வருகின்றது. புதிய ஆயுதங்கள் வாங்கப்பட்டுள்ளன. புதிய பீரங்கிப் படகுகள் வாங்கப்பட்டுள்ளன. புதிய விமானங்களை வாங்குகின்றார்கள். அவர்களுக்கு அமெரிக்காவில் பயிற்சி, இஸ்ரேலில் பயிற்சி, பாகிஸ்தானில் பயிற்சி, இந்தியாவில் பயிற்சி- இவ்வாறு சிறிலங்கா இராணுவம் நவீனமயப்படுத்தப்பட்டு வருகிறது. பலப்படுத்தப்பட்டு வருகின்றது. இராணுவ இயந்திரம் பலப்பட்டு வருகிறது.

நாங்கள் என்ன செய்கின்றோம்? நெடுந்தீவில் பிடிபட்டது 23 எம்.எம். துப்பாக்கிதான். இதைப்போல நூற்றுக்கணக்கான துப்பாக்கிகள் எங்களிடம் இருக்கிறது. இந்த 23 எம்.எம். துப்பாக்கியையும், 3 கிரனேட்டுக்களையும் வைத்துக்கொண்டு நாங்கள் ஆயுதங்களைப் பெருமளவில் கடத்துகின்றோம் என்று சிறிலங்காவின் பத்திரிகை உலகம் எம்மைக் குற்றஞ்சாட்டுகின்றது.

அப்படியானால் யார், எப்படி இந்த இராணுவச் சமநிலையைப் பேணுவது? நானும் பிரபாகரன் அவர்களும் இந்த கண்காணிப்புக்குழு ஜெனரல்கள் இரண்டுபேரையும்- அதாவது, பழைய ஜெனரலையும் புதிய ஜெனரலையும் அழைத்து, கிட்டத்தட்ட 2 மணித்தியாலமாக இந்த இராணுவச் சமநிலை குறித்துப் பேசினோம். இராணுவம் எப்படி நவீனமயமாக்கப்படுகின்றது? அவர்கள் ஆட்களைச் சேர்க்கலாம். நாங்கள் ஆட்களைச் சேர்க்கமுடியாது. அதாவது, 18 வயதுக்கு ஒரு வயது குறைந்தாலும் சிறுவர்களைப் படையில் சேர்ப்பதாகப் பழியை எங்கள் மீது போடுகிறார்கள். ஆனால், இராணுவம் பலப்பட்டு வருகிறது. அப்போது அவர்களிடம் நியாயம் கேட்டோம். என்ன மாதிரி இந்த விடயத்தில் உங்களுடைய தீர்வு என்னவென்று கேட்டோம்.

அப்போது அவர்கள் சொன்னார்கள். நீங்கள் சொல்வது சரி. நாங்கள் இந்தப் பிரச்சினையைப் பற்றிக் கதைக்கின்றோம் என்றார்கள். நாங்கள் சொன்னோம். கதைக்கவேண்டாம். உயர்மட்டத்துக்கு இந்த விடயத்தைச் சொல்லுங்கள். உலக நாடுகளுக்குச் சொல்லுங்கள். விடுதலைப் புலிகள் சமாதானத்தைப் பேணவேண்டும் என்ற உறுதிப்பாட்டில் தங்களைக்கூடப் பலப்படுத்தாமல் இருக்கிறார்கள். ஆனால், நீங்கள் ஒரு அரசு என்றரீதியில் பெருமளவு ஆயுதங்களைக் கொண்டுவந்து குவித்து

(10 ஆம் பக்கம் பார்க்க)

## துணுக்காய் வலயத்தில் புலமைப் பரிசில் கணக்கு ஆரம்பம்

(நவிண்டில்)

துணுக்காய் கல்விவலயத்திற் குட்பட்ட பாடசாலை மாணவர் களுக்கு, மாங்குளம் - இலங்கை வங்கியில் புலமைப்பரிசில் கணக் குகள், ஆரம்பித்து வைக்கப்படவுள் ளன. நாளை பி.ப. 1.30 மணிக்கு மாணவர்களின் போக்குவரத்துச் சிரமத்தைத் தவிர்க்கும் வகையில், ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம், கற்சிலைமடு அரசினர் பாடசாலை, முத்தையன்கட்டு வலதுகரை மற் றும் இடதுகரை அ.த.க.பாடசாலை ஆகிய பாடசாலைகளில் ஏற்கனவே தெரிவுசெய்யப்பட்ட மாணவர்க ளுக்கு இக்கணக்குகள் ஆரம்பிக் கப்படவுள்ளன. சம்பந்தப்பட்ட மாண வர்கள், அவர்களின் பெற்றோரைத் தவறாது சமுகமளிக்குமாறு வங்கி முகாமையாளர் சந்திரன் தெரிவித் துள்ளார்.

(116)

# அரசின் சமாதான முயற்சிகளை ஆதரிக்கும் ஊடகவியலாளர்களுக்கு கடும் தண்டனை

## ஜே.வி.பியின் விமல் வீரவன்ச எச்சரிக்கை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் மேற்கொண்டிருக்கும் சமா தான முயற்சிகளுக்கு ஆதரவு அளித் துவரும் ஊடகங்கள் மற்றும் ஊடக வியலாளர்களுக்குக் கடுமையான தண்டனை விதிக்கப்படும் என்று எச் சரித்துள்ளார் ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச.

நேற்றுமுன்தினம் கொழும்பில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியும், ஜே.வி. பியும் இணைந்து நடத்திய அரசாங் கத்தின் சமாதான முயற்சிகளுக்கு எதிரான பேரணியின் முடிவில் நடை பெற்ற கூட்டத்திலேயே விமல் வீர வன்ச இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற் றுகையில்,

சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் இணைந்து விரைவில் ஆட்சியமைக்க விருக்கிறோம். எமது ஆட்சி அமைக் கப்பட்டவுடன், இப்போதைய அரசாங் கத்தின் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும் ஊடகங்கள், ஊடக வியலாளர் - கடுமையான தண்ட னைக்குள்ளாக்கப்படுவர்.

நாம் சமாதான முயற்சிகளுக்கு எதிரானவர்களல்ல.

ஆனால், சமாதான முயற்சிகளின் பெயரால் அரசாங்கம் - புலிகளுக்கு எல்லாவற்றையும் கொடுத்துக்கொண் டிருப்பதைப் பார்த்துக்கொண்டு இருக்க முடியாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(க)

## சென்.பீற்றர்ஸ் அணி வெற்றி

சண்டிலிப்பாய் பிரதேசசெயலக பிரிவுக்குட்பட்ட உதைபந்தாட்ட அணிகளுக்கிடையில் நடத்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நவாலி சென்.பீற்றர்ஸ் அணி வெற்றி யீட்டியது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு மல்லாகம் ஆர்.டி.எஸ் மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் - இளவாலையின் ஹென் றீஸ் அணியை 1:0 என்ற கோல் கணக்கில் சென்.பீற்றர்ஸ் அணி வென்றது.

## மகாசபைக் கூட்டம்

வல்லை ஸ்ரீமுத்துமாரி அம்மன் தேவஸ்தான மகாசபைக் கூட்டம் எதிர்வரும் 16 ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை காலை 10 மணிக்கு க.குகப்பிரசாதன் தலைமையில் ஆலயமுன்றிலில் நடைபெறவுள்ளது.

# புல்லுமலையில் மிதிவெடி அகற்ற ஐ.நா. நடவடிக்கை!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு புல்லுமலைப் பகு தியில் மிதிவெடிகளை அகற்றுவ தற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கிறது.

ஐக்கியநாடுகள் அபிவிருத்தித் திட்ட நிறுவனத்தின் உதவியுடன் மேற்படி மிதிவெடி அகற்றும் செயற் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வுள்ளது.

இச்செயற்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கான முதற்கட்ட ஏற்பாடு கள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள் ளது.

இந்த நடவடிக்கையின் ஒரு கட் டமாகப் புல்லுமலைக் கிராமத்தில் மிதிவெடிகள் தொடர்பான விழிப்பு ணர்வுக் கருத்தரங்குகள் போன் றவை நடத்தப்பட்டு வருகின்றன.

அதேவேளை, மக்கள் பாவனைக் காகத் திறந்துவிடப்பட்டிருக்கும் ஏ -5 வீதியின் அண்மையாகவுள்ள மிதி வெடிகளையும் அகற்றுவதற்கு நட வடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

(க)

# கரையோரப் பாதுகாப்புக்கான நிதி; வட - கிழக்குப் பகுதி புறக்கணிப்பு

நாட்டின் கரையோரப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக உலகவங்கி யால் வழங்கப்பட்ட நிதியுதவியை வட-கிழக்குப் பகுதிகளின் கரையோ ரப் பாதுகாப்புத் திட்டங்களுக்கு அர சாங்கம் ஒதுக்கீடு செய்யவில்லை எனத் தெரியவருகின்றது.

இலங்கையின் கரையோரப் பகுதி களில் ஏற்படுவரும் கடலரிப்பிலி ருந்து பாதுகாக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுப்பதற்கு - உலகவங்கி எட்டுக் கோடி டொலர் களை அரசாங்கத்துக்கு வழங்கியுள் ளது.

இந்த நிதியைப் பயன்படுத்தி மேற்கு மற்றும் தெற்குப்பிராந்தியக் கடற்கரையோரங்களில் மண்ணரிப்புக் களைத் தடுக்கவும், மீன்பிடித்துறை முகங்களை விருத்திசெய்யவும், தெரிவுசெய்யப்பட்ட துறைமுகங் களை அபிவிருத்தி செய்யவும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

ஆனால், வட- கிழக்குப் பகுதி கள் கடலரிப்பு அபாயம் அதிகமாக உள்ளபோதும், கடற்கரையோரப் பாதுகாப்புக்காக நிதி ஒதுக்கப்பட வில்லை எனத் தெரிவிக்கப்படு கிறது.

# அத்துருகிரிய ஆயுதக்களஞ்சிய வழக்கு கொட்டகதெனியவுக்கு அழைப்பாணை

அத்துருகிரிய - மிலேனியம் சிற்றியில் ஆயுதங்கள் மறைத்து வைத்திருந்து தொடர்பாக - இராணு வப் புலனாய்வுப்பிரிவு அதிகாரிக ளுக்கு எதிராகத் தொடரப்பட்டுள்ள வழக்கில், சாட்சியமளிக்க வருமாறு முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் கொட்டகதெனியவுக்கு நீதி மன்றம் அழைப்பாணை விடுத்துள் ளது.

உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவின் விசேட உத்தர வின்பேரில், பிரதிப்பொலிஸ் மா அதிபர் கொட்டகதெனியவே - மிலே னியம் சிற்றி ஆயுதக்களஞ்சியத் தில் தேடுதல் நடத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(க)



மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி, புனர்வாழ்வு சம்பந்தமான கலந்துரையாடல் வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக்கழக கேட்போர் கூடத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றபோது, அதில் கலந்துகொண்ட பிரமுகர்கள் குழுக்களாகக் கலந்துரையாடல் நடத்துவதையும், விடுதலைப் புலிகளின் பொருளாதார ஆலோசகரும் சமாதானப் பேச்சுவார்த்தைக் குழுவின் பிரதிநிதியுமான ஜோய் மகேஸ்வரன் அங்கு உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

# 10 இந்திய மீன்பிடிப் படகுகள் கற்பிட்டியில் தடுத்து வைப்பு

(புத்தளம்)

புத்தளம் கற்பிட்டி கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்த, பத்து இந்திய் இழுவைப்படகுகளைக் கடற்படையி னர் கைப்பற்றியுள்ளனர்.

கற்பிட்டிக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்துக்கொண்டிருந்த பத்து இழுவைப் படகுகளை, கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக் குக் கடற்படையினர் கைப்பற்றினர்.

இந்த இழுவைப்படகுகளின் தலைவர்களை மட்டும் தடுத்து வைத்துக்கொண்டு, ஏனையோர் இந்தி யாவுக்குத் திரும்ப - கடற்படையி னரால் அனுமதிக்கப்பட்டது.

பத்து இந்திய மீனவர்கள் - பொலி ஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். படகுகள் கற்பிட்டிக் கடற்படைத் தளத்தில் தடுத்துவைக்கப்பட்டுள் ளன.

## மெய்வல்லுநர் போட்டி

ஆழியவளை சி.சி.த.க. வித்தி யாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பி.ப 2 மணிக்கு வித்தியாலய அதிபர் ச.திரவியராசா தலைமையில் நடை பெறவுள்ளது.

இநிகழ்வில் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் தி.செல்வரத் தினம் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

(117)

# ஐ.தே.மு அரசாங்கத்தைக் கலைக்க முற்பட்டால் ஜனாதிபதிக்கு எதிராகக் குற்றவியல் பிரேரணை

## அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கா கூறுகிறார்

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி - அரசாங்கத்தைக் கலைப்பதற்கு முயற்சி செய்வாரா னால் அதற்குத் தாம் எந்தவகை யிலும் இடமளிக்கப்போவதில்லை என்று அமைச்சர் எஸ்.பி.திஸ நாயக்க தெரிவித்துள்ளார்.

இவ்வாறான முயற்சிகள் மேற் கொள்ளப்படும் பட்சத்தில், ஜனாதி பதிக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை முன்வைக்கத் தான் தயங்கப்போவதில்லை என் றும் அவர் கூறினார்.

ஹிங்குராங்கொடவில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் பேசுகையி லேயே அவர் இவ்வாறு தெரிவித் தார்.

பிரதமர் நாட்டைச் சரியான வழி யில் வழிநடத்துகின்றார். இத்த கையநிலையில் அரசாங்கத்தைக் கலைக்க ஜனாதிபதி முயற்சித்தால் அதனை உரியமுறையில் எதிர் கொள்வதற்கு ஐக்கிய தேசிய முன் னணி தயாராகவே இருக்கிறது என் றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கைதடி முதல் கொடிகாமம் வரையான பகுதிகளுக்கு ஜூன் மாதம் முதல் 24 மணிநேர மின்விநியோகம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பிரதேசத்தில் - கைதடி முதல் கொடிகாமம் வரை யான பகுதிகளுக்கு ஜூன் மாதம் முதல் 24 மணிநேர மின்சாரம் வழங் கப்படும். இதற்கான முதற்கட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள தாக மின்சாரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் கடந்தகால யுத்த நடவடிக்கைக ளால் - மின்கம்பிகள், மின்கம்பங்கள் சேதமடைந்துள்ளன. தற்போது மின்கம்பங்களை அமைப்பதற்கான ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கான மின்னிணைப்பு வேலை கள் பூர்த்தியடையச் சில மாதங்கள் தேவை. இதனால், இந்தப் பகுதிக ளுக்கு ஜெனரேற்றர்கள் மூலம் மட்டுப் படுத்தப்பட்ட நேரத்தில் மின்சாரம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளது. இதன் முதற் கட்டமாகச் சாவகச்சேரி நகருக்கும் அதனை அண்டிய பகுதிகளுக்கும் பகல் நேரம் மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது. இந்த மின்சார விநி யோகம் ஏனைய பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படவுள்ளதாகவும் தெரி விக்கப்படுகின்றது.

கைதடி முதல் கொடிகாமம் வரையான கிராமங்களுக்கு 24 மணிநேர மின்சாரம் வழங்குவதற் கான பூர்வாங்க வேலைகள் நடை பெற்றுவருகின்றன. இவ்வேலைகள் எதிர்வரும் ஜூன் மாதத்திற்குள் முடி வடைந்துவிடும். முடிந்ததும், இப்பகு திக்கான 24 மணிநேர மின்சாரம் வழங்கப்படும். பின்னர் கட்டம் கட் மாகத் தென்மராட்சிப் பிரதேசத்தின் ஏனைய பகுதிகளுக்கும் மின்சார விநியோகம் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(ச)

# பத்து இந்திய மீனவர்கள் நீதிமன்றால் விடுதலை

(சிறுப்பிட்டி)

கடந்த ஜனவரி மாதம் 31 ஆம் திகதி வடபகுதிக் கடலில் கைதான பத்து இந்திய மீனவர்கள் நேற்று முன்தினம் இலங்கைக் கடற்படையி னரால் - இந்திய கடற்படையினரி டம் ஒப்படைக்கப்பட்டனர். பொலிஸ் மா அதிபர் ஆனந்தராஜாவின் விசே உத்தரவை அடுத்து மல்லாகம் மாவட்ட நீதிமன்று இவர்களை விடு தலை செய்தது.

இதைத் தொடர்ந்து காங்கேசன் துறைப் பொலிஸாரால் விடுதலை செய்யப்பட்ட 10 மீனவர்களையும்- கடற்படையினர் வங்கக்கடலில் வைத்து இந்தியக் கடற்படையினரி டம் நேற்று முன்தினம் ஒப்படைத்தனர்.

இதேசமயம், எல்லைதாண்டி வந்த இந்திய மீனவர்களை கடற் படையினரிடம் ஒப்படைக்குமிடத்து, வள்ள ஓட்டிகளை மட்டும் தடுத்து வைக்குமாறும் நீதிபதி, பொலிஸா ரைக் கேட்டுக்கொண்டார்.

(78)

## கச்சதீவு ஆலய உற்சவத்திலிருந்து...



கட்டித் தழுவும் இந்திய - இலங்கை மத குருக்கள்.



அந்தோனியார் ஆலயத்தில் கொடியேற்றப்படும் காட்சி.



ஆலயத்தின் முன்பாக இந்திய யாத்திரிகர்கள்.



ஆலயம் சென்ற குடும்பம் ஒன்று சமையல் பணியில்.

# யாழ்.விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களை கொள்வனவு செய்ய அமைச்சர் நடவடிக்கை

யாழ். மாவட்ட விவசாயிகளின் விவசாய உற்பத்திப் பொருட்களைக் கொள்வனவுசெய்ய - வர்த்தக, நுகர்வோர் விவகார அமைச்சர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

யாழ்.மாவட்டத்திலுள்ள விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களின் உற்பத்திச்செலவு - தென்னிலங்கையைவிட உயர்வாகவே உள்ளது.

இந்நிலையில் உற்பத்திச் செலவை ஈடுசெய்யக்கூடிய வகையில் - உள்ளூர் உற்பத்திகளை விற்பனைசெய்ய முடியாமல் விவசாயிகள் நட்டமடைகின்றனர். இவ்வுள்ளூர் விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்தவும், நியாயமான விலையில் - தனியாருடன் போட்டியிட்டுக் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டியதன் அவசியம் பற்றி நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா - அமைச்சர் ரவி கருணாநாயக்காவிற்கு எடுத்துரைத்திருந்தார்.

இதற்கு இணங்கவே 12 ஆயிரம் முதல் 21 ஆயிரம் மெற்றிக்தொன் வரையிலான வெங்காயம், உருளைக்கிழங்கு ஆகியவற்றைக் கொள்வனவு செய்ய அமைச்சர் நடவடிக்கை எடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (லி)

## வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேசசபையின்

# பிக்கப் வாகனத்தை மீளப்பெற பொலிஸார் நடவடிக்கை எடுக்காததால் மீண்டும் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி தெற்கு, மேற்குப் பிரதேச சபையினுடைய பிக்கப் வாகனத்தை மீள ஒப்படைக்குமாறு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுளளபோதும், இன்னமும் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. இதனால், நேற்றுமுன்தினம் நேரில்சென்று பிக்கப் வாகனத்தை மீளப் பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுத்துள்ளேன்.

- இவ்வாறு கரவெட்டி பிரதேச சபையின் செயலாளர் சி.பசுபதி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வடமராட்சி தெற்கு, மேற்குப் பிரதேசசபைக்குச் சொந்தமான 252-6561 இலக்க பிக்கப் வாகனம் முன்னைய தலைவரால் இன்றுவரை ஒப்படைக்கப்படவில்லை. சபையின் ஆயுடகாலம் முடிவடைந்து விட்டது. இச்சபையின் செயற்பாடுகளுக்கென வழங்கப்பட்ட இவ்வாகனத்தை, கடந்த 18 ஆம் திகதியன்று விசேட ஆணையாளர் அல்லது செயலாளரிடம் ஒப்படைத்திருக்கவேண்டும்.

இவ்விடயம் தொடர்பாக முன்னாள் தலைவருக்கு முகவரியிடப்பட்டு உள்ளூராட்சி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஆகியோருக்குப் பிரதியிடப்பட்ட கடிதம் அனுப்பிவைக்கபபட்டபோதும், குறித்த வாகனம் தன்னால், தமது ஈ.பி.டி.பி. கட்சித் தலைமை அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

செயலாளராகிய என்னால் இவ்விடயம் தொடர்பாகக் கடிதமூலம் நெல்லியடிப் பொலிஸில் கடந்த 28 ஆம் திகதி முறைப்பாடு செய்யப்பட்டது. இதன்பின்னர் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படாததால், நேற்று முன்தினம் நெல்லியடி பொலிஸ் நிலையத்திற்கு நேரடியாகச சென்று, அவர்களது முறைப்பாட்டுப் பதிவேட்டுப் புத்தகத்தில் பிரதேச சபைக்குச் சொந்தமான பிக்கப் வாகனத்தை சபையின் செயற்பாட்டுக்காகக் கூடியவிரைவில் பெற்றுத் தருமாறு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

**சின்ன மீனைப் போட்டு**
**பெரிய மீனைப் பிடிப்பது எப்படி....?**
**(நாளை வளரும்)**


**வாழ்க வளமுடன்**

HAPPY BIRTHDAY

**மூன்றாவது அகவையில்**



பெயர் : பு.மிதுனன்
முகவரி: வடலியடைப்பு, பண்டத்தரிப்பு.

**ஐந்தாவது அகவையில்**

பெயர் : அ.அமலவட்சனா
முகவரி: 12 ஆம் வட்டாரம், நெடுந்தீவு



**ஆறாவது அகவையில்**



பெயர் : ப.சிந்துஜன்
முகவரி: 37, மில்றோட், உக்கிளான்குளம் வவுனியா.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்


# தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளுக்கு இன்று கணினிகள் வழங்கப்படுகின்றன!

## யாழ். வலயப் பணிமனைக்கு சமுகமளிக்க அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளின் நூலகங்களுக்கும், வலயக் கல்விப் பணிமனைகளுக்கும் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு, கணினித் தொகுதிகளை - இன்று யாழ்.வலயக் கல்வித் திணைக்களத்தில் வைத்து வழங்கவுள்ளதாக - உதவிக் கல்விப் பணிப்பாளரும், மாகாணக் கல்வி அமைச்சின் நூலக இணைப்பாளருமாகிய ந.அனந்தராஜ் தெரிவித்துள்ளார்.

வேம்படி மகளிர் கல்லூரி, பெரியபுலம் மகாவித்தியாலயம், நயினாதீவு மகாவித்தியாலயம், மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம், யாழ். இந்து மகளிர் கல்லூரி, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி ஆகியவற்றுக்கு, தலா ஒரு கணினித் தொகுதி வீதம் வழங்கப்படவுள்ளது.

மேற்படி பாடசாலை அதிபர்கள் இன்று காலை பத்து மணிக்கு பதவி முத்திரை, பொருட்பதிவேட்டுப் புத்தகம் ஆகியவற்றுடன் யாழ்ப்பாண வலயக் கல்வித் திணைக்களத்திற்கு சமுகமளிக்கும்படி கோரப்பட்டுள்ளனர்.

அதேவேளை - தீவகம், யாழ்ப்பாணம், வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் வலயக் கல்விப் பணிமனைகளுக்கும் தலா இரு கணினிகள் வீதம் வழங்கப்படவுள்ளதாகவும் உதவிக் கல்விப் பணிப்பாளர் ந.அனந்தராஜ் மேலும் தெரிவித்துள்ளார்.

### சீருடை விநியோகம்

கரவெட்டி பிரதேசசெயலர் பிரிவின் கீழுள்ள, பாடசாலை மாணவ, மாணவிகளுக்கான சீருடை விநியோக முத்திரைகள், கிராம அலுவலர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன எனவும், இவற்றுக்கு விண்ணப்பம் செய்த மாணவ, மாணவிகளின் பெற்றோர், சம்பந்தப்பட்ட கிராம அலுவலர்களிடமிருந்து அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் கரவெட்டிப் பிரதேசசெயலர் தெரிவித்துள்ளார்.


**வாழ்க வளமுடன்**

சிறாரின் பெயர்:------------------------------
முகவரி :------------------------------
பிறந்த ஆண்டு:------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------
பெற்றார் ஒப்பம்

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை

## மாணவர்களுக்கான முன் ஆயத்தப் பயிற்சிகள்





# மாணவர் மலர்

## வினாப்பத்திரம் - 11

(01). (i) கீழே தரப்பட்டுள்ள பொது அறிவுத் தகவலை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

### பொது அறிவுத் தகவல்



எறும்புகள் சமூகத்தில் தேனியைப் போலவே- ராணி எறும்பு, ஆண் எறும்புகள் மற்றும் வேலைக்கார எறும்புகள் என மூன்று பிரிவுகள் உள்ளன. வேலைக்கார எறும்புகளில் சில உளவாளி எறும்புகளும் உண்டு. இவை எப்பொழுதும் உண வைத்தேடி அலைந்து கொண்டிருக்கும். இனிப்பை அறிந்தவுடன் புற்றுக்குத் திரும்பிவந்து, மற்ற எறும்புகளுக்குச் செய்தியைத் தெரிவிக்கும். எப்படிச் செய்தியைத் தெரிவிக்கும் தெரியுமா? தன் அடி வயிற்றை நிலத்தில் அழுத்தி ஒருவித வாசனைத்திரவத்தை வெளியேற்றும். அந்த வாசனையை நுகர்ந்து மற்ற எறும்புகள் சாரை சாரையாகச் சர்க்கரையை நோக்கிப் படையெடுக்கின்றன.

01. இங்கு தரப்பட்டுள்ள பொது அறிவுத்தகவல் எதைப்பற்றியது?

(1) தேனியைப் பற்றியது. (2) ராணி எறும்பு பற்றியது.
(3) உளவாளி எறும்பு பற்றியது. (4) எறும்புகளின் வாழ்க்கை பற்றியது.

02. உளவாளி எறும்புகளின் பணி யாது?

(1) மற்றவர்களைப் பற்றிய தகவல்களைத் திரட்டுவது.
(2) வாசனையை வெளிவிடுவது.
(3) உணவு இருக்கும் இடத்தைக் கண்டறிந்து தகவல் கூறுவது.
(4) ராணித் தேனிக்கு உணவு தேடிக் கொடுப்பது.

03. எறும்புகளில் எத்தனை பிரிவுகள் உள்ளன?

(1) இரண்டு பிரிவுகள். (2) நான்கு பிரிவுகள்.
(3) சொல்ல முடியாது. (4) மூன்று பிரிவுகள்.

04. மேலே தரப்பட்டுள்ள பொது அறிவுத் தகவலுக்குப் பொருத்தமான தலைப்பு யாது?

(1) எறும்பும் வாழ்வும். (2) எறும்பும் சுறுசுறுப்பும்.
(3) எறும்பும் உணவும். (4) எறும்பும் ராணியும்.

05. எறும்பை எதற்கு உதாரணமாகக் கூறுவார்கள்?

(1) நட்புக்கு. (2) சுறுசுறுப்புக்கு.
(3) ஒற்றுமைக்கு. (4) அமைதிக்கு.

(02) பின்வருவனவற்றை திண்மம், திரவம், வாயு என வகைப்படுத்துக.
ஐஸ்கட்டி, ஆணி, மரத்துண்டு, பால், நீராவி, வளி, குளிர்பானம், சிறு கல், மெழுகு ஆவி, தேங்காயெண்ணெய்.

| திண்மம் | திரவம் | வாயு |
|---|---|---|
| | | |

(03) ஒவ்வொரு மாணவரும் விரும்பும் நிறங்கள் தொடர்பான நிரல்வரைபு ஒன்று கீழே தரப்பட்டுள்ளது. அவ்வரைபைக்கொண்டு வினாக்களுக்கு விடை தருக.




1. அதிக மாணவர் விரும்பும் நிறம் எது? (..........................)
2. மிகக்குறைவானோர் விரும்பும் நிறம் எது? (..........................)
3. எந்த இரு நிறங்களை ஒரே அளவு எண்ணிக்கையான மாணவர்கள் விரும்புகின்றனர்? (....................) (....................)
4. சிவப்பு நிறத்தை எத்தனை மாணவர்கள் விரும்புகின்றனர்? (..........................)
5. நீல நிறத்தை எத்தனை மாணவர்கள் விரும்புகின்றனர்? (..........................)
6. சிவப்பு நிறத்தையும், மஞ்சள் நிறத்தையும் விரும்பும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது? (..........................)
7. சிவப்பு நிறத்தைவிடக் கூடுதலாக நீல நிறத்தை எத்தனை பேர் விரும்புகின்றனர்? (..........................)
8. நீல நிறத்தைவிட ஊதா நிறத்தை எத்தனை மாணவர்கள் குறைவாக விரும்புகின்றனர்? (..........................)
9. கறுப்பு, பச்சை, மஞ்சள் நிறங்களை விரும்பும் மாணவர்களின் மொத்தத் தொகை யாது? (..........................)
10. நிரல் வரைபில் தரப்பட்டுள்ள நிறங்களை விரும்பும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது? (..........................)

04. பின்வரும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நிறை அளவுகளைக் காட்டுவதற்கு 500 கிராம் பைக்கற்றுக்கள் எத்தனை தேவை என்றும், 250 கிராம் பைக்கற்றுக்கள் எத்தனை தேவை என்றும் எழுதுக.

| கிலோ கிராம் | 500 கிராம் பைக்கற்றுக்கள் | 250 கிராம் பைக்கற்றுகள் |
|---|---|---|
| 1 Kg | | |
| 3 Kg | | |
| 5 Kg | | |
| 6 Kg | | |
| 8 kg | | |

05. பின்வரும் தமிழ்ச் சொற்களை ஆங்கிலத்தில் எழுதுக.
(1) கால்கள் ...................... (2) கண்கள் ......................
(3) அறை ...................... (4) முத்திரை......................
(5) மஞ்சள் ...................... (6) மரக்கறி ......................

06. பின்வரும் ஆங்கிலச் சொற்களைத் தமிழில் எழுதுக.
(1) **SUN** .................. (2) **MOON** ......................
(3) **RIVER** .................. (4) **TREES** ......................
(5) **WOOD** .................. (6) **WATER FALL** ......................

05. பொருத்தமான சொற்களைக்கொண்டு வெற்றிடங்களை நிரப்புக.
1. தாவரங்கள் .............................. மூலம் நீரை உறிஞ்சுகின்றன.
2. இலங்கையின் தேசிய மலர் .............................. ஆகும்.
3. உணவைத் தயாரித்த பின் உணவுப் பொருட்களை .............................. வேண்டும்.
4. பழங்களை உண்ணும் முன் .............................. வேண்டும்.
5. மலசலகூடம் சென்று வந்தபின் .................... சவர்க்காரமிட்டுக் கழுவுதல் வேண்டும்.
6. உணவு தயாரிக்கும்போது .............................. அணிதல் வேண்டும்.
7. முத்திரை சேகரித்தல் சிறந்த .............................. ஆகும்.
8. பூக்களையும், இலைகளையும் பயன்படுத்தி அழகான .............................. செய்யலாம்.

(06) "தாவரங்களின் பயன்கள்...." என்ற தலைப்பில் ஆறு வாக்கியங்கள் எழுதுங்கள். ஒவ்வொரு வாக்கியமும் குறைந்த பட்சம் நான்கு சொற்களையாவது கொண்டிருத்தல் வேண்டும்.
1. ..............................................................
2. ..............................................................
3. ..............................................................
4. ..............................................................
5. ..............................................................
6. ..............................................................

(தொடரும்....)

உதயசந்திரன்
B.A. (Cey) B.Ed(Hons) Dip.in.Ed.



# சுற்றாடல் புவியியல்

## க.பொ.த உயர்தரம்

### பகுதி 1



(1) மேலேயுள்ள நிலவுருவங்கள் எந்தவகை அரிப்புச் செயற் பாட்டுடன் தொடர்புடையது?
1. சுண்ணாம்புக்கல் 2. கடல் அலை
3. ஆற்றரிப்பு 4. பனிக்கட்டி அரிப்பு

(2) கீழே தரப்பட்டுள்ள படமானது வட அரைக்கோளத்தில் முரண் சூறாவளியானது மையத்திலிருந்து கடிகாரத் திரையில் வீசுவதற்கான காரணம்:-




1. கொறியோலிஸ் விசை 2. மறைவெப்பம்
3. நழுவு வீதம் 4. ஈர்ப்பு விசை

(3) மைக்கா படிகம், களிக்கல் ஆகிய பொருட்களின் சேர்க் கைகளினாலான பாறை எது?
1. கருங்கற்பாறை 2. சுண்ணாம்புப்பாறை
3. படிகப்பாறை 4. சோக்குப்பாறை

(4) முனைவுப் பகுதியிலிருந்து மத்தியகோட்டை நோக்கிச் செல்லும் நீரோட்டங்களை................ என்பர்.
1. முரண் நீரோட்டம் 2. குளிர் நீரோட்டம்
3. வெப்ப நீரோட்டம் 4. இடைவெப்ப நீரோட்டம்

(5) ஐக்கிய அமெரிக்காவில் வையொமிங் மாநிலத்தில் **Yellow Stone** என்ற தேசியப் பூங்காவில் இருப்பது?
1. வெப்பவூற்று 2. கொதி நீரூற்று
3. ஆட்டீசியன் கிணறு 4. சாய்வூற்று

(6) பின்வருவனவற்றுள் இலங்கையில் காணப்படாத அம்சம்.
1. முருகைக்கற்பாறை 2. பாறைத்தொடர்
3. எரிமலைகள் 4. நீரிணைகள்

(7) கடல் மட்டத்திலிருந்து குத்துயரமாகச் செல்லச் செல்ல ஒவ்வொரு 300 அடிக்கும் 1 வீதம் (100 -0.6**c**) வெப்பநிலை குறைவடைதல்.
1. அமுக்கவீதம் 2. நழுவுவீதம்
3. வெப்பப் பரம்பல் 4. வெப்பநிலை நேர்மாறல்

(8) புவிசார் தொகுதியொன்றின் உபதொகுதிகளாகும். அவற்றின் பிழையான உபதொகுதிகளைத் தெரிக.
1. எரிமலை, சமுத்திரத்தொடர், ஏரிகள், சூறாவளி.
2. சூரியக்கதிர்கள், ஆறுகள், பாறைகள், காடுகள்.
3. தரைக்கீழ் நீர், மடிப்பு மலை, கனிப்பொருள், மண்.
4. பனிக்கட்டி, முருகைக்கல், பருவக்காற்று, மேட்டு நிலம்.

(9) இலங்கையில் காணப்படும் அநேக ஆறுகளின் வடிவம்,
1. மரநின் வடிகால் 2. சட்டத்தட்டு
3. ஆரை வடிகால் 4. கங்கண வடிகால்

(10) வளிமண்டலச் சமுத்திரச் சுற்றோட்டம் நிகழ்வது,
1. இயற்கைப் பரிமாற்றம் 2. சக்திப் பரிமாற்றம்
3. சுற்றாடல் பரிமாற்றம் 4. வளிப்பரிமாற்றம்

(11) சுண்ணாம்புக்கல் பிரதேசங்கள் கரைசல் செயற்பாட்டுக்கு உட்படுகின்றது - இதனால் உருவாகும் நிலவுருவங்க ளில் போல்ஜே தரைக்கீழ் குகை அதிகமாகக் காணப் படும் நாடு?
1. இத்தாலி 2. ஸ்பெயின்
3. யுகோசிலாவியா 4. இலங்கை

(12) ஆபிரிக்காக் கண்டத்திலுள்ள இடைவெப்பப் புல்வெளி யாது?
1. லானோஸ் 2. சவன்னா
3. வெல்ட் 4. பிரேரிஸ்

(13) உலகின் காலநிலையில் மாற்றத்தை உருவாக்கும் காரணிகள் தரப்பட்டுள்ளது. மிகவும் சரியான கூற்று.
1. புவிவெப்பமண்டதல், நீர் மட்டம் உயர்தல்.
2. புவிவெப்பமடையும் தன்மையும்/பாலைவனமாகும் தன்மை.
3. அமிலமழை, வெப்ப அதிகரிப்பும்.
4. காடழிப்பும், பச்சைவீட்டு வாயுக்களின் அதிகரிப்பும்



(14) ஆபிரிக்காக் கண்டப் பகுதியில் நிழற்றப்பட்ட பிரதேசம் கெப்பனின் காலநிலைப பிரிவுகளில் எவ்வகையைச் சார்ந்தது?
1. **AW**
2. **AF**
3. **AM**
4. **BS**

(15) கீழே கொடுக்கப்பட்டுள்ள படம் புவியின் உள்ளீட்டைக் காட்டுகிறது. **B** எனக் குறிக்கப்பட்ட புவியின் உள்ளீடு.




1. சீமா
2. உள்ளீடு
3. கீழ்ப்படை
4. கோளவகம்

(16) இந்து சமுத்திரத்திலுள்ள தீவுக்கூட்டங்களில் சில.
1. சொக்கோத்திரா, கான்சிபார், கோமோறோ
2. ஒக்கினி, யோட்சியா, செத்துலந்து
3. பிரித்தானியா, கிறின்லாந்து, ஐஸ்லாந்து
4. பிலிப்பைன்ஸ், ஜப்பான், நியூசிலாந்து

(17) கீழ்வளரிகளையும், மூடுதாவரங்களையும் பல்வேறு பறவை, விலங்கினங்களையும் கொண்டு காணப்படும் காடுகள்.
1. அயனமழைக்காடுகள். 2. ஊசியிலைக்காடுகள்
3. இடைவெப்பவலயக்காடுகள் 4. பற்றைக்காடுகள்

(18)




மேலே கொடுக்கப்பட்டுள்ள படம் காட்டுவது,
1. உவர்நீர்ப்பரம்பல் 2. தின்னல்வட்டம்
3. பாறைவட்டம் 4. நீரியல்வட்டம்

(19)




**A,B,C** எனக் குறிக்கப்பட்ட நிலவுருவங்களின் சரியான தொகுதி,
1. பாறைப்பிதிர்வு நேர்மாறின, குறைதலைகீழ் மடிப்பு
2. சாய்வுக்குறை, பாறைப்பிதிர்வு, குனித்தமடிப்பு
3. நிலைக்குத்துக்குறை பாறைப்பிதிர்வு, குனித்தமடிப்பு
4. நிலைக்குத்துக்குறை, மேலுதைப்புக்குறை, சமச்சீர் மடிப்பு

(20).




**X** குறிக்கும் கலம் யாது?
1. ஹட்லிக்கலம் **(Hartly)**
2. ஹலிக்கலம் **(Halley)**
3. ரொஸ்பிக்கலம் **(Rossby)**
4. பல்மன் கலம் **(Palman)**

(21) பச்சை வீட்டு விளைவு என்பது,
1. தாழ்ந்த வளிமண்டலத்திலிருந்து உயர்வளிமண்ட லத்துக்குச் செல்லும் வாயுக்களின் அசைவுகள்.
2. வாயுக்களின் கலப்பு.
3. மேலதிகமான வெப்பத்தை வளிமண்டலத்தில் தேக்கி வைத்தல்.
4. சிற்றலைகளால் வெப்பத்தைப் பெறுதல்.

(22). ஆட்டிக் வட்டத்துக்குள் 24 மணி நேரமும் பகலாயிருப்பது எந்நாளில்?
1. மார்ச் 21 இல்.
2. யூன் 21 இல்.
3. செப்டம்பர் 23 இல்.
4. டிசம்பர் 22 இல்.

(23). வளிமண்டலத்தின் படையாக்கத்தினை **ABCD** தெளிவாகக் காட்டுகின்றது.




1. படைமண்டலம், மாறன்மண்டலம், அயன்மண்டலம், கிடைமண்டலம்
2. மாறன் மண்டலம், படைமண்டலம், இடைமண்டலம், அயன்மண்டலம்
3. அயன் மண்டலம், இடைமண்டலம், படைமண்டலம், மாறன்மண்டலம்
4. இடைமண்டலம், அயன்மண்டலம், மாறன்மண்டலம், படைமண்டலம்

(24) பெரும் புயல்களாவன **(Hurricane)**,
1. அயனச்சூறாவளிகள்.
2. இடைவெப்பவலயச் சூறாவளிகள்.
3. வங்காள விரிகுடாவின் தாழமுக்கங்கள்.
4. முரண் சூறாவளிகள்.

(25) ஓசோன் படை குறைவாகக் காணப்படுவது,
1. மத்திய கோட்டுப் பகுதிக்கு மேலாக.
2. இடைவெப்ப அகலக்கோட்டுப் பகுதிக்கு மேலாக.
3. அயனப் பகுதிக்கு மேலாக.
4. அந்தாட்டிக்காவிற்கு மேலாக.

(26) நிலைத்து நிற்கும் அபிவிருத்தி என்பது **(Sustainable development)**,
1. தரமிழக்கும் உற்பத்திகளைப் பயன்படுத்துவதனால் மட்டும் அடையப்பெறலாம்.
2. மீளப்பெறக்கூடிய வளங்களை மட்டும் பயன்படுத் துவதனால் அடையப்பெறலாம்.
3. வளங்களை ஆகக்கூடியளவு பயன்படுத்துவதனால்.
4. சூழலை மாசுபடுத்தாத வளங்களால் அபிவிருத்தியை அடையப் பெறலாம்.

(27) **CFC** பாவனை குறைக்க (அதாவது குளோரோ புளோரோ காபன்) அல்லது அதற்குப் பதிலாகப் பயன்படுத்துவது,
1. **HCFC**
2. $CF_2CL_2$
3. $HCO_3$
4. $CHF_2CL$

(28) அண்டக்கதிர்வீசலில் காணப்படுவது,
1. யூரேனியம்
2. தோரியம்
3. நிக்கல்
4. பொஸ்பேற்று

(29) புவியில் காணப்படும் அமுக்க வலயங்கள்.
1. நான்கு
2. இரண்டு
3. மூன்று
4. ஒன்று

(30) அயன அயல் உயர் அமுக்க வலயத்திலிருந்து மத் தியகோட்டுத் தாழ் அமுக்கத்தை நோக்கி வீசுவது,
1. தடக்காற்றுகள்
2. மேலைக்காற்று
3. முனைவு கீழைக்காற்றுக்கள்
4. அயனமண்டல கீழைக்காற்றுகள்

(31) அயன மண்டலச் சூறாவளிகள் கரிபியன் கடல் பகு திகளில் எவ்வாறு அழைக்கப்படும்?
1. தைபூன்
2. ஹரிக்கேன்
3. சினூர் **(Chinook)**
4. போன் **(Fohn)**

(32) பற்றக்கோணியா, அரிசோனாப் பகுதிகள் பின்வருவன வற்றுள் எக்காலநிலைப் பாகுபாட்டுக்குள் சார்ந்தது?
1. வெப்ப பாலைநிலக் காலநிலை.
2. இடைவெப்ப பாலைநிலக் காலநிலை.
3. இடைவெப்ப கிழக்கு இளஞ்சூட்டுக் காலநிலை.
4. இடைவெப்பக் குளிரான சமுத்திரக் காலநிலை.

(33) **UNEP** என்பது சூழல் பாதுகாப்பில் ஈடுபடும் சர்வதேச ஒத்துழைப்பு ஸ்தாபனம் ஆகும். இதன் தலைமையகம் எங்கு அமைந்துள்ளது?
1. தென்னாபிரிக்கா
2. தன்சானியா
3. நைரோபி
4. மொசாம்பிக்

(34) எது வளிமாசாக்கியாகவும், நீர்மாசாக்கியாகவும் பெரும் பாலும் இருத்தல் கூடும?
1. **U.V** கதிர்
2. குளோரோபுளோரோகாபன்
3. வளமாக்கி
4. வெப்பம்

(35) இலங்கைச் சூழல் தொடர்பாகப் பின்வருவனவற்றில் தவறானது.
1. இலங்கையின் அயனமழைக்காடுகளில் உள்நாட்டு இனங்களே மிகவும் அதிகம்.
2. கடற்தாவரங்கள் அரிதான சில விலங்கின் வாழ்விடங் களாக உள்ளன.
3. இலங்கையில் முருகைக் கற்பாறைகளுக்குப் பொரு ளாதாரரீதியில் பயன்கிடைப்பதில்லை.
4. இலங்கையின் பருவக்காற்றுக் காடுகளில் அதிக வெட்டு மரங்களே காணப்படுகின்றமை.

(36) சூழலின் தரம் குன்றலுக்குக் காரணமாக அமையாத செயற்பாடு.
1. காட்டழித்தல்
2. மண்ணரிப்பு
3. சுத்திகரிக்கப்பட்ட தொழிற்சாலைக் கழிவுகள் நீரில் விடப்படல்
4. மேலதிக நீர்ப்பாவனை

T. அருள்மொழி B.A.
யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

**அன்பார்ந்த பெற்றோர்களே!**

5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பாகத் தற்போது நாம் வெளியிட்டுவரும் மாதிரி வினாத்தாள் வழி காட்டல் குறிப்பு தொடர்பாக உங்களிடமிருந்து அபிப்பிராயங் களையும் ஆலோசனைகளையும் எதிர்பார்க்கின்றோம்.
உங்கள் ஆலோசனைகளை, அபிப்பிராயங்களை
**மாணவர் மலர்,**
**நமது ஈழநாடு,**
**267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்**
என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.
*- பொறுப்பாசிரியர்.*

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு

மிகல்மேவல் மெய்ப்பொருள் காணார்
இகல்மேவல்
இன்னா அறிவி னவர் - *திருக்குறள்.*

# நமது நோக்கு

## எல்லை மீறுகிறது அரக்கத்தனம்!

போர் நிறுத்தம் ஆரம்பித்ததன் பின்னர் - கடற்படையின் படுமோசமான யுத்தநிறுத்த மீறல்களுக்கும், அடாவடித்தனங்களுக்கும் இலக்காகிவந்த கடற்பிராந்தியத்தில் - வரைமுறை எல்லாவற்றையும் கடந்து - சர்வதேசக் கடற்பரப்பில் - வர்த்தக நோக்கிற்காகச் சென்றுகொண்டிருந்த விடுதலைப் புலிகளின் வாணிபக் கப்பலொன்று - கடற்படையினரால் போர்நிறுத்த உடன்பாட்டை எவ்விதத்திலும் மதிக்காத முறையிலும், சர்வதேச கடற்பயண விதிமுறைகளை மீறிய வகையிலும் தாக்கி அழிக்கப்பட்டிருக்கின்றது.

இதுவரையில் - உள்ளூர் கடற்பிராந்தியப் பரப்பினுள் - விடுதலைப் புலிகளைச் சீண்டும் விதத்திலும், ஆத்திரமூட்டுவதாகவும் நடந்து - மூன்று போராளிகளின் உயிர்களை அநியாயமாகப் பறித்த கடற்படை -

தனது அதிகார வரம்புக்கு அப்பால், நீதி நெறிமுறையின்றி - மிகவும் திட்டமிட்ட முறையில், எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாதவகையில் - தற்போது பேரழிவு ஒன்றை நடாத்தி முடித்திருக்கின்றது.

விடுதலைப் புலிகள், அமைதி முயற்சிகளில் வைத்திருக்கின்ற நம்பிக்கையையும், விசுவாசத்தையும் - அதனடிப்படையில் காட்டிவரும் பொறுமையையும் பயன்படுத்தி - இத்தகைய எல்லைமீறலையும் செய்துவிடலாமென்ற திமிர்த்தனத்துடன், மேற்கொள்ளப்பட்ட அழிவு நடவடிக்கையாக - இது, தமிழ்மக்களைக் கோபமூட்டியிருக்கிறது.

சர்வதேசக் கடற்பரப்பில் - விடுதலைப் புலிகள் வணிக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவது ஒன்றும் இரகசியமான விடயமல்ல. கடந்த பல ஆண்டுகளாக - உலகளாவிய ரீதியில், உரிய சட்ட விதிமுறைகளுக்கமைவாக - விடுதலைப் புலிகளின் சார்பு நிறுவனங்கள் பலவும் வாணிப முயற்சிகளை மேற்கொண்டு வருவதை - கொழும்பிலுள்ள ஊடகங்களே செய்திகளாக வெளியிட்டிருக்கின்றன.

போர் நடைபெற்ற காலத்திலேயே தொடர்ந்து நடந்த இந்தச் செயற்பாடுகள் - அமைதிக்காலத்தில் - சர்வதேசத்தின் அங்கீகாரத்துடன், தமிழர்களின் ஏகபிரதிநிதிகளாக விடுதலைப் புலிகள் - இலங்கை அரசாங்கத்துடன், பேச்சுக்களில் பங்குபற்றிவரும்போது, உரியவாறு சட்டப்படியே தொடர்ந்ததையும் - அரசாங்கமோ கடற்படையோ தெரியாதெனக் கூறிவிடவும் முடியாது.

இவ்வாறான நிலையில் - புலிகள் ஆயுதக் கடத்தலில் ஈடுபட்டுவருவதாக ஏகத்துக்கும் புரளிகளைக் கிளப்பிவிட்டுவிட்டு, அதன் வழியே - சர்வதேசக் கடற் பரப்பில் - திருகோணமலைக்கு 220 கடல் மைல் தொலைவில் சென்றுகொண்டிருந்த வர்த்தகக் கப்பலை வழிமறித்துத் தாக்கியதை சாதாரணமானதொரு சம்பவமாகக் கொள்ள முடியாது.

இலங்கையின் கடல் எல்லையையும் தாண்டிச் சென்று - குறிப்பிட்டதொரு கப்பலை வழிமறித்துச் சோதனையிடுவதென்பது, தாக்கி அழிப்பதென்பதும் - இப்படித்தான் செய்யப்போகின்றோம் எனத் திட்டமிட்டுச் செய்ததன் வெளிப்பாடே என்பது தெளிவானது.

கடற்படையின் உயர்பீடத்தினதும், இலங்கையின் அரசியல் தலைமைகளினதும், இன்னும் - அமைதியை விரும்பாத வலுமிகுந்த சக்திகளதும் பின்னணியுடனும், ஆசீர்வாதத்துடனும் - மேற்கொள்ளப்பட்டிருக்கின்ற இந்த நெறிமுறை தவறிய செயலைக் கட்டுப்படுத்துவதில், நிறுத்துவதில்- போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு தவறியது அல்லது கையாலாகாத நிலையிலிருந்தது - கண்காணிப்புக்குழுவின் வீச்சையும், அதன் அதிகாரத்தையும் கேள்விக்குரிய தாக்குகின்றது என்றே மக்கள் கருதுகின்றனர்.

தமது கப்பல் தாக்கப்படும் ஆபத்துப் பற்றி விடுதலைப் புலிகளால், கண்காணிப்புக்குழுவுக்கு அறிவிக்கப்பட்ட நிலையிலும் - கண்காணிப்புக்குழுத் தலைவரால் உறுதி வழங்கப்பட்ட போதும் - கப்பல் தாக்கி மூழ்கடிக்கப்பட்டதும் - அதிலிருந்த போராளிகள் பதினொரு பேர் உயிர்துறக்க வேண்டிவந்ததும் - கண்காணிப்புக்குழுவின் செயற்பாடுகளையும் மீறி, அழித்தே தீருவோம் என்று கங்கணம் கட்டி நின்ற கடற்படையினதும், அதற்கு உத்தரவிட்ட, அமைதியைச் சீர்குலைக்க விரும்பி நிற்கும் அரசியல் தலைமைகளினதும் - அப்பட்டமான அரக்கத்தனத்தையே வெளிக்காட்டுகின்றது.

அமைதியைச் சிதைத்து, இரத்த ஆறை மீண்டும் பெருக்கெடுத்தோடச் செய்யுமுகமாக மேற்கொள்ளப்பட்டு வரும் சதி முயற்சிகளின் ஒரு அங்கமாகவே - இந்தச் சம்பவத்தையும் பார்க்க வேண்டியுள்ளது.

விடுதலைப் புலிகளால் அர்ப்பணிப்புடன் அமைதி பேணப்பட்டுவரும் நிலையில், கடற்பயணத்தில் திறமைமிக்க பதினொரு போராளிகளை - வஞ்சகமான தாக்குதலில் இழப்பதென்பது - விடுதலைப் புலிகளை மட்டுமல்ல, தமிழ் மக்கள் அனைவரையுமே சினத்திற்குள்ளாக்கியிருப்பதை அறிய முடிகின்றது.

சமாதான காலத்திலும் - போராளிகள் இழப்பும் - ஆத்திரமூட்டும் சம்பவங்களும் தொடர்வதானது, அமைதியை நீடித்து நிலைக்கச் செய்வதற்கு உதவியாக அமைய மாட்டாதென்பதை அரசாங்கமும், சர்வதேசமும் உணர்ந்து செயற்படாவிட்டால் - அமைதியைக் குலைத்து, போரை விரும்புபவர்களின் எண்ணமே உறுதியாகும். அது அமைதி முயற்சிகளையே இன்னமும் ஆபத்தானதும் சிக்கலானதுமான கட்டத்திற்குள் கொண்டு சென்று விடும் என்பதை சமாதானத்தை நாடும் எவரும், தீவிரம் நிறைந்த எச்சரிக்கையாகச் சொல்லவே விரும்புகின்றனர்.

# சட்டவிரோதமான மின்சாரப் பாவனையாளர்களை கட்டுப்படுத்த பொதுஅமைப்புகள் உதவவேண்டும்

## யாழ்.மின்சாரசபை அதிகாரி வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமாக மின்சாரம் பெறுவோரைக் கட்டுப்படுத்துவதற்கு பொது அமைப்புக்கள், சனசமூக நிலையங்கள் உதவவேண்டும் என்று யாழ். மின்சார சபை உயரதிகாரி ஒருவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

குடாநாட்டில் சட்டவிரோதமாக மின்சாரம் பெறுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. சட்டவிரோதமாக மின்சாரம் பெறுவோரைக் கட்டுப்படுத்த மின்சார சபையிடம் போதிய வளங்கள் இல்லாதிருப்பதுடன் இதில் பல பிரச்சினைகளையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது.

ஊழியர்கள் பகலில் மட்டுமே பணிபுரிவதால் இரவில் சட்டவிரோத மின்சாரம் பெறுவோரைக் கண்டுபிடிக்க முடியாதுள்ளது. அத்துடன், தனியாக ஊழியர்கள் சென்று சட்டவிரோதமாக மின்சாரம் பெறுவோரைப் பிடிப்பதில் பாதுகாப்புப் பிரச்சினைகளும் உள்ளன.

இதனால் கிராம ரீதியாக உள்ள பொது அமைப்புக்கள் இணைந்து சட்டவிரோத மின்சாரம் பெறுவோரின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த உதவ வேண்டும் என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

## காணிப் பிரச்சினை ஆராயும் குழு இவ்வாரம் தொடக்கம் செயற்படும்

கிழக்கு மாகாணத்தில் காணிப் பிரச்சினைகள் சம்பந்தமாக ஆராய்ந்து தீர்வுகாண விடுதலைப் புலிகளையும் முஸ்லிம்களையும் உள்ளடக்கி அமைக்கப்பட்ட உபகுழுவின் செயற்பாடுகள் இவ்வாரம் ஆரம்பமாகவுள்ளதாகப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு அறிவித்துள்ளது.

இந்தக் குழுவில் முஸ்லிம்கள் தரப்பில் ஆறு பேரும், புலிகள் தரப்பில் ஆறு பேரும் இடம்பெறுவர்.

# சிறுவர், வயதானோரின் வாழ்க்கைத்தர உயர்வு; விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடத்த ஏற்பாடு

## 'வாழும் கலை' நிறுவனப் பிரதிநிதிகள் வருகை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள சிறுவர்கள் மற்றும் வயதுவந்தோரின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தும் வகையில் விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடாத்துவதற்கு 'வாழும் கலை' என்ற நிறுவனத்தினர் யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

'வாழும் கலை' நிறுவனத்தின் பயிற்சி இயக்குநர் கணேஷ், அகில இந்திய வைத்திய நிறுவனத்தின் புற்றுநோய் நிபுணர் வினோத் கொஞ்சிப்பிள்ளை, குழந்தைகளுக்கான மனவளர்ச்சி நிபுணர் ஆகியோரே யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

இவர்கள் ஒரு மாதம் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து அகதிமுகாம்கள், பாடசாலைகள் மற்றும் பல்வேறு கிராமங்களுக்குச்சென்று கருத்தரங்குகளை நடத்தவுள்ளனர். (லி)

## மனைவி, மைத்துனியை தாக்கிவிட்டு தலைமறைவானவர் சடலமாக மீட்பு!

(வடமராட்சி கிழக்கு)

மதுபோதையில் வீட்டினுள் புகுந்து மனைவியையும் மைத்துனியையும் கொட்டனால் தாக்கிவிட்டுத் தலைமறைவான குடும்பஸ்தர் ஒருவர் ஐந்து நாட்களின் பின் நஞ்சருந்தி மரணமான நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

வல்வெட்டித்துறை கம்பர்மலையைச் சேர்ந்த கந்தையா பத்மநாதன் (வயது 55) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

சடலம் மரண விசாரணையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

## பயணியை மோதிய ராணுவ சிப்பாய் தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை

(வவுனியா)

வீதியால் சென்றவரை வாகனத்தால் மோதிக் காயப்படுத்திய இராணுவச் சிப்பாய் தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்துகொண்டார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வவுனியாவில் இடம்பெற்றது. நேற்றுமுன்தினம் காலை 9.30 மணியளவில் ஏ-9 வீதியால் சென்ற இராணுவ கனரக வாகனம், சைக்கிளில் சென்ற ஒருவர் மீது மோதியது.

அந்த நபர் பலத்த காயமடைந்து நினைவிழந்தார். இராணுவ வாகனத்தை ஓட்டிவந்த சிப்பாய் அந்த நபர் இறந்துவிட்டதாகக் கருதி - அச்சத்தினால் தன்னைத்தானே துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை செய்துகொண்டதாகத் தெரியவருகின்றது.

# தென்னை மீள் நடுகைக்கு மானியம் வழங்க ஏற்பாடு

## விண்ணப்பிக்குமாறு கோரிக்கை

கடந்த இரு தசாப்தங்களாக நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக அழிவடைந்த தென்னந் தோட்டங்களை மீள உருவாக்கும் நோக்குடன் தெங்குப் பயிர்ச் செய்கைச் சபை - தெங்கு மீள் நடுகை மானியத் திட்டம், தெங்கு புதுநடுகை மானியத்திட்டம் என்பவற்றை உடனடியாக நடைமுறைப்படுத்த முன்வந்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் அழிக்கப்பட்ட தென்னந் தோட்டங்களை மீள்நடுகை செய்வதற்கு ஏக்கருக்கு 15 ஆயிரத்து 500 ரூபாவும் புதுநடுகை மானியத் திட்டத்திற்கு 16 ஆயிரம் ரூபாவும் மானியமாக வழங்கப்படவுள்ளது.

மேற்படி மானியத் திட்டத்தில் பயனாளிகளாக இணைய விரும்பும் தெங்குச் செய்கையாளர்கள் - கமநலசேவை நிலையக் கட்டடம், நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தரைச் சந்தித்து ஏப்ரல் 15 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் - பளை உதவி அரசாங்க அதிபர் பணிமனையிலுள்ள உத்தியோகத்தரிடமும் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவிலுள்ள கமநல சேவைத் திணைக்களத்திலுள்ள உத்தியோகத்தருடனும் தொடர்புகொள்ளும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

# தபால் திணைக்களத்தில் சிற்றூழியர்களாக கடமையாற்றிய 34 பேர் தபாலதிபராக நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டிலுள்ள தபால் நிலையங்களில் நிலவும் வெற்றிடங்களுக்கு 34 தபால் அதிபர்கள் இம்மாதம் முதல் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகத் தபால் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

குடாநாட்டிலுள்ள தபால் நிலையங்களில் நிலவிவரும் வெற்றிடங்கள் நீண்டகாலமாக நிரப்பப்படாமையால் தபால் சேவையினை நடாத்துவதில் திணைக்கள அதிகாரிகள் பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்கி வந்தனர். அத்துடன் உத்தியோகத்தர்களின் பற்றாக்குறையை நீக்குமாறு அரசாங்கத்திடம் கோரிக்கைவிடுக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து தபால் நிலையங்களிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காக, சிற்றூழியர்களுக்கான தடைகாண் பரீட்சை நடைபெற்றது.

இந்தப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு அண்மையில் நேர்முகப்பரீட்சை இடம்பெற்றது. இதில் சித்தியடைந்த 34 பேருக்கு இம் மாதம் 24 ஆம் திகதி முதல் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

சிற்றூழியர்களாக இருந்த இவர்களுடைய இடத்திற்கு பதிவுசெய்யப்பட்ட பதிலாளராகக் கடமையாற்றிவரும் 34 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்வுள்ளது. (ச)

# பாடசாலை மட்டக் கணிப்பீடு தேவையானது; நடைமுறைப்படுத்துவதிலேயே குறைபாடு!

**கொழும்புப் பல்கலைக்கழகக் கல்வியியற்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளரான கலாநிதி மா.கருணாநிதியுடனான நேர்காணல் இது-**

*கேள்வி:-* பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள கணிப்பீட்டு முறையைக் குறைவாகக் கூறுவோரும் உள்ளனர். நிறைவாகக் கூறுவோரும் உள்ளனர். நீங்கள் ஒரு கல்வியியலாளர் என்ற வகையில் கூறும் விளக்கம் என்ன?

*பதில்:-* 1990 இல் ஜொம்ரினில் நடைபெற்ற மாநாடு எல்லோருக்கும் கல்வி என்ற விடயத்தை அமுல்படுத்துவதில் அக்கறை கொண்டிருந்தது. எல்லோருக்கும் கல்வி என்ற விடயத்துடன் எமது புதிய கல்விச் சீர்திருத்தத்தில் அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிக்கும் (Essential Learning Competitions) முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. அத்தியாவசியக் கற்றல் தேவைகளைப் பிள்ளைகள் அடைந்துள்ள விதத்தினை அறிவதற்காகவே பாடசாலை மட்டக் கணிப்பீடு அறிமுகப்படுத்தப்பட்டது.

பாடசாலை மட்டக் கணிப்பீட்டின் அறிமுகத்தினால்- வேலைப்பளு அதிகம், உரியநேரத்தில் கற்பித்தலை நடத்திமுடிக்கக் காலம் போதாது, ஏனைய நாளாந்த நிர்வாகப் பணிகளைக் கவனிக்க முடியவில்லை என்ற குறைபாடுகள் பரவலாகத் தெரிவிக்கப்பட்டுள்ளன.

மாணவர்களைப் பொறுத்தவரையில் - ஆறாம் வகுப்பில் கல்வி கற்பவர்கள் பாடசாலைக் கணிப்பீட்டினால், செயற்பாடுகள் மூலம் கற்கும்போது - தாம் உற்சாகமடைந்துள்ளோம். அதனைப் பெரிதும் வரவேற்கின்றோம் என்கின்றனர். ஒன்பதாம் வகுப்பு மாணவர்கள் - வேலைச்சுமை காரணமாகவும், செயற்திட்டம் மற்றும் ஒப்படைகளுக்கு நேரம் போதாது என்கின்றனர்.

பெற்றோர்கள் மரபுமுறைச் சோதனைகளின்படி வழங்கப்படும் புள்ளிகளையே பெரிதும் வரவேற்கின்றனர்.

மேற்கூறிய பல்வேறு பிரச்சினைகளும் பாடசாலை மட்டக் கணிப்பீட்டினை அமுல்செய்யும் விதமே காரணமாகின்றது.

பாடசாலை மட்டக் கணிப்பீடு என்னும் எண்ணக்கரு பற்றிய போதியவிளக்கம் ஆசிரியர்களுக்கு இல்லை. வகுப்பறையில் கற்பித்தல் நிகழும்பொழுதே, மாணவரின் முன்னேற்றங்களை மதிப்பிடாமல், கற்பித்து முடித்த பின்னர், பிள்ளைகளின் ஞாபகசக்தியை அளவிடுவதிலேயே பெரும்பாலான ஆசிரியர்கள் காலத்தைச் செலவு செய்கின்றனர். இது தவறானது.

பாடசாலை மட்டக் கணிப்பீடு பற்றிய அறிவும், பயிற்சியும் போதியளவில் வழங்கப்படுவதில்லை. அநேகமான ஆசிரியர்கள்- ஒரு சில வாரங்களில் நடத்தப்பட்ட பயிற்சியுடனும், சிலவேளைகளில் ஆசிரிய ஆலோசகர்களின் வழிகாட்டல்களுடன் மட்டுமே கணிப்பீ




டுகளை மேற்கொள்கின்றனர்.

அநேகமான ஆசிரியர்கள் கணிப்பீட்டில் அறிவுசார் விடயங்களுக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுக்கின்றனர். அறிவாளர்களுக்கோ, ஏனைய திறன்கள் மற்றும் தேர்ச்சிகளுக்கோ முக்கியத்துவம் கொடுப்பதில்லை.

பாடசாலை மட்டக் கணிப்பீடு பற்றிய விளக்கம் பெற்றோருக்கும் இல்லை.

பாடசாலை மட்டக் கணிப்பீட்டின் மூலம் மாணவர்கள் கற்கும் விடயங்களை நீண்டகாலம் நிலை நிறுத்திக் கொள்வதற்குரிய ஏற்பாடுகள் எவையுமில்லை. கணிப்பீடு நடைபெறும்பொழுது, அதியுயர் புள்ளிகளைப் பெறும் பிள்ளைகள் தவணைப் பரீட்சைகளில் அவ்வாறு ஈட்டமுடியவில்லை.

மேற்கூறிய காரணங்களை அவதானிக்கும் பொழுது - பாடசாலை மட்டக் கணிப்பீட்டில் எவ்விதகுறையும் இல்லை. அதனை அமுல் செய்யும் விதத்திலேயே குறைகள் மலிந்து காணப்படுகின்றன. இக்குறைகள் களையப்பட்டால் அது ஒரு வரவேற்கத்தக்க விடயமாகும் என்பது எனது கருத்து.

*கேள்வி:-* தற்போதையநிலையில் ஆங்கிலமொழி விருத்தி இல்லாது, மாணவர்கள் பலர் கஷ்டங்களுக்கு உள்ளாகின்றனர். அதே வேளையில், இடைநிலை வகுப்புக்களில் தமிழ்மொழியைப் போதிப்பதற்கும் பொருத்தமான ஆசிரியர்கள் இல்லை என்றும் குறைகூறப்படுகிறது. இந்தநிலை ஏற்படக் காரணம் என்ன?

*பதில்:-* ஆங்கிலமொழியின் இன்றியமையாமை எல்லோராலும் நன்கு உணரப்பட்டுள்ளது. பாடசாலை மட்டத்தில் ஆங்கில மொழியை ஒரு சில நிலைகளில் மீண்டும் போதனா மொழியாக அறிமுகம் செய்வதற்கான ஏற்பாடுகளும் துரிதமாக மேற்கொள்ளப்படுகின்றன. ஆயினும், இந்த நோக்கத்தினை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு ஆங்கில மொழியையும், ஆங்கிலமொழியில் ஏனைய பாடங்களைப் போதிப்பதற்கும் போதியளவில் ஆசிரியர்கள் இல்லை. 1960 ஆம் ஆண்டிலிருந்து பல்கலைக்கழகம் வரையில், தாய்மொழிக்கல்வி அறிமுகமான பின்னர், தாய்மொழிப் போதனை முழுமை பெற்றது. இதன்மூலம் தாய்மொழியில் கற்கும் வாய்ப்பு உண்டாயிற்று என்பதற்காக, எல்லோரும் தமிழ்மொழியைக் கற்றுக்கொண்டார்கள் எனக் கூறமுடியாது. 1970 ஆம் ஆண்டின் பின்னர் பல்கலைக்கழகங்களிற்கூட தமிழ்மொழியை விசேட பாடமாகவோ அல்லது ஏனைய பாடங்களோடு ஒரு பாடமாகவோ கற்கின்ற மாணவர் தொகையில் சடுதியான வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

1994 இல் கல்வியமைச்சு மேற்கொண்ட ஒரு அளவீட்டிலிருந்து தமிழ்மொழி மூலம் கற்பிக்கும் ஆசிரியர்களில் - 50 சதவீதமானோருக்குத் தமிழ்மொழி அறிவு போதாது என்ற தகவல் வெளிக்கொணரப்பட்டுள்ளது. பெரும்பாலான ஆசிரியர்கள் பாடவிடயங்களில் ஆர்வம் காட்டுவதுபோல, தமிழ்மொழியில் கவனம் எடுக்கும் தமது பொறுப்பைத் தட்டிக்கழித்து வருகின்றனர். மீண்டும் ஆங்கிலமொழிப் போதனைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் போது, தமிழ்மொழியின் பயன்பாடு மீண்டும் குறைந்துவிடுமோ என்ற அச்சம் தோன்றுகிறது என்பதனால், தமிழ்மொழி போதிக்கப்படுவதனைச் சிறப்பாக மேற்கொள்ளும் வகையில் ஆசிரியர்களை ஊக்குவித்தல் வேண்டும்.

*கேள்வி:-* எமது பிரதேசத்தில் பாடசாலைப் பரிசில் நாள், விளையாட்டுப் போட்டி போன்ற முக்கிய நிகழ்வுகள் பாடசாலை நாட்களில் கொண்டாடப்படுவதால், மாணவரின் கல்வி பாதிப்படைவதற்கு வாய்ப்பு இருக்கின்றதா?

*பதில்:-* இணைப்பாடவிதானச் செயற்பாடுகளுக்கு அதிகளவிலான நேரம் தேவை என்பது உண்மைதான். ஆயினும், அவை கட்டாயம் பாடசாலைகளில் இடம் பெறவேண்டியவை. மாணவர்களின் ஆளுமையும், சமூகப்பொருத்தப்பாடும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலேயே வளமூட்டப்படுகின்றன. விளையாட்டுப்போட்டிகள்- பரிசில்களைப் பெறுவதற்காக மட்டும் நடைபெறும் நிகழ்வு எனப் பெரும்பாலான மாணவரும், பெற்றோரும் கருதுகின்றனர். நேரம் வீணடிக்கப்படுகின்றது என்கின்றனர்.

பல பாடசாலைகளில் விளையாட்டுக்களிலும், ஏனைய அமைப்புக்களிலும் மாணவர்கள் பங்கு


மா.கருணாநிதி

கொள்வதை ஆசிரியர்கள் ஊக்குவிப்பதில்லை. அவை கல்வியைப் பாதிக்கும் என அவர்கள் கருதுகின்றார்கள். இத்தகைய கருத்துக்களுடன் எனக்கு உடன்பாடில்லை. விளையாட்டு நேரங்களில்- அதில் கவனஞ்செலுத்தும் பிள்ளை- கல்வியிலும் அக்கறை கொண்டிருப்பான்.

விளையாட்டுப் போட்டிகளும், பரிசளிப்பு வைபவங்களும் மாணவர்களின் தலைமைத்துவப் பண்பு, ஆக்கத்திறன், கூட்டுப்பொறுப்பு, நம்பிக்கை முதலிய வாழ்க்கைக்கு அத்தியாவசியமான விடயங்களை விருத்திசெய்ய உதவுகின்றன என்பதால் அவற்றுக்குரிய முக்கியத்துவம் பாடசாலைகளில் வழங்கப்படுதல் வேண்டும்.

பாடசாலைகள், புத்தகக்கல்விக்குரிய இடமாக மட்டும் இருந்தால், அக்கல்வியை இலகுவில் வேறு இடங்களிலும் பெற்றுக்கொள்ளலாம். பாடசாலைகள் ஒழுங்குக்கான நேரமுகாமைத்துவத்துடன் திட்டமிட்டுச் செயற்பட்டால்- பரிசளிப்பு விழாக்களும், விளையாட்டுப் போட்டிகளும் கல்வியைப் பாதிக்காது.

நேர்காணல்:-
கா.பஞ்சரத்தினம்

# மீளக் குடியேறவோ, நிதியுதவி பெறவோ மயிலிட்டி மக்கள் அருகதையற்றவர்களா?

**க.தங்கலிங்கம்**

பிரபல்யம் பெற்ற பாடசாலைகள், கல்லூரிகளையும், சரித்திரப் பிரசித்தி பெற்ற ஆலயங்கள், தேவாலயங்கள், விவசாயத்திலே செழிப்பான பெரு நிலப்பரப்புக்கள், மீன்பிடியில் இலங்கையிலேயே முதன்மையான நிலையிலுள்ள மயிலிட்டி போன்ற மீன்பிடிக் கிராமங்களையும்- தன்னகத்தேகொண்டு யாழ்.மாவட்டத்தில் தனிச்சிறப்புப் பெற்றுவிளங்கிய பெருமைக்குரிய நிலபபரப்புத்தான் வலி.வடக்கு பிரதேசம்.

இங்கிருந்து வெளியேற்றப்பட்ட மக்கள் இன்றைய அமைதியான சூழலிலும்- உயர் பாதுகாப்பு வலயம் என்று கூறி அங்கு சென்று வாழ அனுமதி மறுப்புத் தெரிவிக்கப்படுகின்றது.

தாம் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்த பிரதேசத்தில் சென்று வாழ வேண்டும் என்பதற்காக இப்பகுதி மக்கள் எடுத்த எத்தனையோ முயற்சிகளும், எத்தனங்களும் எந்தப் பயனையும் இன்றுவரை தரவில்லை.

இந்த நிலையில்தான் வலி. வடக்குப் பிரதேசத்தில் ஓர் கோடியிலுள்ள மயிலிட்டி கிராமத்து மக்களின் இன்றைய நிலையைப பற்றிச் சற்றுநோக்க முனைகின்றோம்.

யாழ்.மாவட்டத்திலே பெரும் படைத்தளம் என்று சொல்லப்படுகின்ற பலாலி இராணுவ பெருந்தளத்தின் வடபுறத்தே மிக நெருக்கமான நிலையில் உள்ள கிராமம் தான் மயிலிட்டி. இலங்கையின்



தேசிய வருமானத்தில் கணிசமான வருமானத்தைப் பெற்றுக்கொடுத்தது என்பதால்தான், இக்கிராமத்தின் மீன்பிடியின் சிறப்புப்பற்றிப் பல ஆண்டுகளுக்கு முன்பே இலங்கை நடாளுமன்றத்தில் புகழாரம் சூட்டப்பட்டது.

இவ்வாறு தம் தொழிலால் உயர் சிறப்புப்பெற்ற இக்கிராமத்து மக்கள், பொருளாதாரநிலையில் தன்னிறைவு பெற்றிருந்தனர். இந்நிலையில்தான், 1987 ஆம் ஆண்டில் கடல்வலயச்சட்டம் கொண்டு வரப்பட்டது. இதனால் - இக்கிராம மக்கள் மட்டுமல்ல, மீன்பிடித் தொழிலைச் செய்த அனைத்து மக்களுமே தொழில்ரீதியாகப் பெரும் பாதிப்புக்குள்ளாகினர்.

இதன்பின் 1990 ஜுன் 15 ஆம் திகதி யாழ்.மாவட்டத்தில் ஏற்பட்ட பதற்றநிலையைத் தொடர்ந்து, மக்கள்- தங்கள் கையில் கிடைத்த பொருட்களுடன் வெளியேறிய அந்த சோகக்காட்சி இன்றும் மனக்கண்முன் நிற்கின்றது.

இப்படி ஓடியவர்கள் குடாநாட்டுக்குள் பல இடங்களில், வீடுகளிலும், ஆலயங்களிலும், இடம் பெயர்ந்தோர் முகாம்களிலும் வாழ்ந்து வந்தனர்.

## செய்திக் கட்டுரை

1995 இன் இறுதியில் மீண்டும் வன்னிப் பெருநிலப்பரப்புக்கு இடம் பெயர்ந்தார்கள். அங்கே மாறுபட்ட சூழல், தொழிலின்மை, நோயின் தாக்கம் போன்றவற்றால் பல வகையாலும் பாதிக்கப்பட்டார்கள்.

கடந்த ஆண்டின் ஆரம்பத்தில் ஏற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தமும், ‘ஏ-9’ பாதை திறப்பும் ஓர் பெரும் வரப்பிரசாதமாக அமைந்தது. வன்னியில் வாழ்ந்த மயிலிட்டிப்பகுதி மக்கள் படிப்படியாகக் குடாநாட்டுக்கு வந்து சேர்ந்தனர்.

யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தவர்களுக்கு, இங்குவாழ வீடுகள் இருக்கவில்லை. குறுகிய காலத்துள் வீட்டைவிட்டு விலகவேண்டும் என்ற நிபந்தனையோடு சிலர் வீடுகளைக் கொடுத்தனர்.

இப்படி அன்றாடம் பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுத்து- ஏதோ, எப்படியோ வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த மக்களுக்கு, அரசாங்க உதவிதான் குறிப்பிடும் படி ஏதும் கிடைக்கிறதா? எதுவும் இல்லை. மீளக் குடியேறும் மக்களுக்குப் பணவுதவி, வீட்டுத்திட்டம், என்று பத்திரிகைகளில் பறைசாற்றுகின்றனர். மயிலிட்டி மக்கள் தம் கிராமத்துக்குப் போக மறுத்தார்களா? போகும் முடிவை எதிர்த்தார்களா? அவர்கள் தாம் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்த கிராமத்தைச் சென்றடையப் பெரும் துடிப்போடு இருக்கும் போது, உயர்பாதுகாப்பு வலயம் என்றுசொல்லி, அவர்களின் உரிமை நிராகரிக்கப்படுகின்றது.

மேலும், மயிலிட்டிப்பகுதி மக்கள் வாழ வீடற்று, செய்யத் தொழிலற்று- வாழ்வுக்காகப் போராடிக் கொண்டு, குடத்தனை முதல் தொண்டைமனாறுவரை- கரை சாாந்த இடங்களில் வாழ்வுக்காகப் போராடுகின்றார்கள்.

ஒருபுறம் தம் சொந்த இடங்களுக்குத் திரும்பமுடியாத நிலை. மறுபுறம் - வாழ்க்கையைக் கொண்டு செலுத்துவதற்கான உதவிகளோ, மீள்குடியமர்வுக் கொடுப்பனவோ தரப்படாத நிலை. என்ன பாவம் செய்தார்கள் இந்த மக்கள்...?




# ஐ.சி.சி. உலகக் கிண்ணம் - 2003




## சிலர் அழுவார்


கை தவறி போயிடுமோ...?

அவுஸ்திரேலியாவுடனான ஆட்டத்தில் இலங்கை அணி தோல்வியுற்றும், அங்கு அரவிந்த பதித்த முத்திரை இருந்தது. ஆனால் இந்திய அணியுடன் இலங்கை எதனை விட்டுச் சென்றது? எதுவுமே இல்லை.

இலங்கை அணியின் தோல்விக்கு வரிசையாகக் காரணங்கள் காட்டப்படுகின்றன. இதில் முதலாவது, TOSS வென்ற சனத் துடுப்பெடுத்தாடத் தீர்மானிக்காமல், இந்தியாவைத் துடுப்பாட அனுமதித்தது. இது ஒரு தொழில்நுட்ப, தொழில் நுணுக்கம்சார் பிரச்சினை.

இந்தவகையில் அப்போதைய தளநிலை முதலில் துடுப்பெடுத்தாடுபவருக்கு வாய்ப்பாக இராது என்று சனத் தீர்மானித்ததை, இந்திய அணித் தலைவர் கங்கூலியும் ஒப்புக் கொண்டிருக்கிறார். இதுபற்றிக் கருத்துக் கூறுவதற்கு இன்னும் நிறைய விடயங்கள் அணுகப்படவேண்டும்.

ஆனால், இலங்கையின் அணித்தெரிவு முறையில் ஏதோ குறைபாடுகள் இருப்பதுபோலத் தெரிகின்றது. அல்லது இந்தியாவைக் குறைவாக மதிப்பிட்டு'??? பரீட்சார்த்தம் ஒன்றைச் செய்தது போலத் தெரிகின்றது.

ஏனெனில், எல்லோருடைய கருத்தும் என்னவென்றால், ஜெகான் முபாரக்கிற்குப் பதிலாக அவிஷ்க உள்வாங்கப்பட்டிருக்க வேண்டும் என்பதாகும். மேலும் தொடர்ந்தும் தன் தரம் குறைந்திருக்கும் மஹேல ஜெயவர்த்தனவை, ஏன் மாற்றியிருக்கக்கூடாது என்ற கருத்தும் முன் வைக்கப்பட்டிருக்கிறது.

இன்னொன்று, ஹசானினதும் புலஸ்தியினதும் நீக்கம். இதுவரையிலான ஆட்டங்களில் புலஸ்தி பெரிதாகக் குறைகள் ஏதும் செய்ததாகத் தெரியவில்லை. இப்படியான பல மாற்றங்கள் அணியின் அன்றைய தேவையான கட்டுக்கோப்பைக் குலைத்துவிட்டன என்ற குற்றச்சாட்டு முன் வைக்கப்படுகின்றது.

இன்னொரு வகையில், என்னதான் சனத் களமிறங்கி இருந்தாலும், அவரது FORM பரிபூரணமானதாக இருக்குமா? என்ற நியாயபூர்வமான அச்சம் இலங்கை அணியிடம் இழையோடி இருக்கலாம்.

## சிலர் சிரிப்பார்


எங்களுக்கு வசந்த காலம்.

இந்தியா துடுப்பெடுத்தாட ஆரம்பித்ததும் - சச்சின், ஷேவாக் இருவரும் ஸ்திரமான நிலையொன்றை ஏற்படுத்திவிட்டனர் என்பது நன்றாகவே புலப்பட்டது. இவர்களின் ஓட்ட வேகம் இந்திய அணியை 325 வரை கொண்டு போய்விட்டு விடுமோ? என்ற அச்சத்தைக் கூட ஒரு சந்தர்ப்பத்தில் கொடுத்தது.

ஆனால், ஆட்டத்தின் பிற்பாதியில் ஆட்ட வேகம் குறைக்கப்பட்டமைக்குக் காரணம் சுழற்பந்து வீச்சாளர்கள்தான். சமிந்த வாஸ் தவிர மற்றைய இரு வேகப்பந்துவீச்சாளர்களால் எதுவும் செய்யமுடியவில்லை, இருவரும் சேர்ந்து 16 ஓவர்களில் 110 ஓட்டங்கள் கொடுத்ததைத் தவிர (சராசரி 7).

இந்த வகையில் இந்திய அணியின் சச்சினின் அற்புத ஆட்டம் குறிப்பிடத்தக்கது. அதே போன்று பக்கத்துணையாக ஷேவாக், கங்கூலியின் பங்களிப்பு மிகச் சிறப்பாக இருந்தது.

ஆனால், இலங்கையின் தீர்மானத்துக்கமைய துடுப்பாட்டம் நன்றாக அமைந்திருக்க வேண்டும். இலங்கை தாரைவார்த்தார்களா, சிறிநாத் சிதறடித்தாரா என்று பார்த்தால் சிறிநாத் பக்கம் கை ஓங்குகின்றது. இலங்கை அணி ஆரம்பத் துடுப்பாட்ட வரிசையை அவர் தலைதூக்கவே விடவில்லை. அதி அற்புதமான பந்துவீச்சு SPELL.

இது போதாதென்று ஒன்று விட்டொன்றாக ஷாகிர் கான் நோகாமல் கவிழ்க்க, மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்ததுபோல ஆஷிஸ் நெஹ்றா மிச்ச வேலைகளை எல்லாம் முடித்துக் கொடுத்தார்.

இது கங்கூலி AND CO இன் அதியற்புதமான வெற்றி. 23 ஓவர்களில் இறுதி ஆணி அறையப்பட்டது. சிறப்பாகச் சொல்லப் போனால் முதலாவது பந்தில் இருந்து 23 ஆவது ஓவரின் இறுதிப்பந்துவரை ஜோகன்னஸ்பேர்க் எங்கும் இலங்கை அணியைத் தேடித்திரிந்தோம்.

எங்கும் அவர்களைக் காண முடியவில்லை.

DAY OF TRICOLOUR.

\- நிர்மலன்.

## எங்கிருந்தோ ஆசைகள்...

SUPER SIX இற்குள் ஒருவாறு நுழைந்துவிட்ட இலங்கை அணி, அடுத்தடுத்து இரண்டு படுதோல்விகளைச் சந்தித்து வெந்து போய் உள்ளது. அரை இறுதி ஆட்டக் கனவு பெரும் பாலும் கலைந்து விட்டாலும் இன்று இடம்பெறப் போகும் ஆட்டத்தை பெரும் ஆர்வத்தோடும் எதிர் பார்ப்போடும் பார்த்துக்கொண்டிருக்கிறது இலங்கை அணி. கென்யாவின் விளையாட்டில்தான் தமது உயிரே தங்கியுள்ளது என்று ஏங்கிக்கொண்டிருக்கிறது இலங்கை அணி.

ஆம்.. இன்று GOODYEAR PARK, BLOEMFONTEIN மைதானத்தில் G.M.T. நேரப்படி காலை 8 மணிக்கு நிகழப் போகும் கென்யா VS சிம்பாப்வே ஆட்டத்தில், கென்ய அணியின் தோல்விக்காகத் தவம் இருக்கிறது இலங்கை அணி. ஏற்கனவே 10 புள்ளிகளைப் பெற்ற கென்ய அணி, சிம்பாப்வே அணியை வெற்றியீட்டினால் 14 புள்ளிகளுடன் மிக இலகுவாக அரை இறுதியாட்டத்துக்கு நடைபோடும். இது 7.5 புள்ளிகளுடன், இன்னும் எஞ்சியுள்ள ஒரே ஒரு ஆட்டத்தில் வெற்றியீட்டினால் வரப்போகும் மொத்தம் 11.5 புள்ளிகளைக் பெற்றாலும், இலங்கை அணிக்கு எமனாகத்தான் அமையும்.

கென்யா - சிம்பாப்வே ஆட்டம் விறுவிறுப்பாகத்தான் அமையப்போகிறது. ஏற்கனவே இந்திய அணியைப் போராட வைத்த கென்ய வீரர்களின் திறமைகளை மதிப்பிடும்போது, கென்ய அணியும் முன்வரிசை அணிகளுடன் இன்னும் சில வருடங்களுக்குள் தோழமை கொள்ளும் என்று எண்ணத் தோன்றுகிறது. அந்தளவிற்கு கென்ய அணியின் விளையாட்டு என்பது நல்ல SATISFACTIONதான்.

கென்ய அணிக்கு ரவிந்து ஷா-ஒபுயா நல்ல ஒரு ஆரம்பமாக இருக்கும். தொடர்ந்து வரும் வீரர்களும் சிம்பாப்வே அணியுடன் ஈடுகொடுக்க முற்படுவார்கள். ஏனெனில் சிம்பாப்வே அணியில் குறிப்பிடப்படும்படியாக BOWLERS ஆவேசம் குறைவு என்றே கூறலாம்.

ஆனாலும், BATTING SIDE என்பது சிம்பாப்வே அணிக்கு நல்ல வலுவான நிலையிலேயேயுள்ளது. நமீபிய அணியுடன் விளையாடி 172 ரன்களைக் குவித்த விஷாட், எப்படி பிரயத்தனம் செய்தாலும் ஆடுகளத்தை விட்டு அகற்றமுடியாத அன்டி பிளவர், நடுத்தர வரிசையில் வந்து கலக்கியடிக்கும் விட்டல், இன்னும் அந்தப் பால்மணம் மாறாத பிஞ்சு விக்கட் கீப்பர் டைபூ, அடடா... ஒருவரை மட்டும் மறந்து விட்டோமே. கடந்த ஞாயிறன்று நியூசிலாந்து அணியுடன் இறுதி மூன்று ஒவர்களிலும் சிம்பாப்வே அணி 62 ரன்களையும் அடிக்கக் காரணமான தன்னம்பிக்கை உள்ள அணித்தலைவன் கீத் ஸ்ரீக் எல்லோருமே சிம்பாப்வே அணியின் தூண்கள்தான். இவர்களுடன் கென்ய அணி போராடத்தான் வேண்டுமா..?

முடியும்...! இலங்கை அணியை



சுஜி - யாரும் தப்ப முடியாது.

மண் கவ்வவைத்த எம்மால் முடியும்..... என்று கென்ய வீரர்கள் போராட எத்தனிப்பார்கள்.என்ன இருந்தாலும் சிம்பாப்வே அணிக்கே வெற்றிக்கு POSSIBILITIES அதிகம்.

சிம்பாப்வேயே....! உனக்கு SEMI FINAL இற்குள் நுழையச் சாத்தியம் குறைவு. தோல்வியைத் தழுவி.. எங்களுக்கு CHANCE தருவாயா என்று கென்ய மனங்கள் ஆதங்கப்பட, ஐயகோ..! சிம்பாப்வே அணியே விடாதே. உன் திறமையைக்காட்டு, என்று இலங்கை அணி சிம்பாப்வே அணிக்கு உற்சாகம் கொடுக்க, எங்கே பார்ப்போமே கண்களுக்குக் குளிர்ச்சியை.

சபாஷ் சரியான போட்டி.

\- வீ.ஏ.கோவீ.

## நேற்றைய ஆட்டத்திலிருந்து...


ஹேடனின் விக்கெட்டை வீழ்த்திய பொண்ட்.


நியூசிலாந்தின் பந்தை எதிர்கொள்ளும் பெவன்.

## நாளும் ஒரு வினா

இன்று வரையான உலகக்கிண்ண ஆட்டங்களில் மிக வேகமாகப் பெறப்பட்ட அரைச்சதம் யாருடையது?

பிறைன் லாறா எதிர் கனடா
(50 ஓட்டங்கள் - 23 பந்துகள்)

**உலகக் கிண்ணக் கிரிக்கெட் அனுசரணை**

## உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003

### அவுஸ்திரேலியா எதிர் நியூசிலாந்து அணி

**அவுஸ்திரேலிய அணி**

| | | |
|---|---|---|
| கில்கிறிஸ்ட் | LBW b பொண்ட் | 18 |
| ஹேடன் | C மக்கல்லம் b பொண்ட் | 01 |
| பொன்டிங் | C பிளெமிங் b பொண்ட் | 06 |
| மாட்டின் | C மக்கல்லம் b பொண்ட் | 31 |
| லீமன் | C அஸ்ரல் b அடம்ஸ் | 04 |
| பெவன் | C வின்சென்ற் b ஓரம் | 56 |
| ஹொக் | LBW b பொண்ட் | 00 |
| ஹார்வி | b பொண்ட் | 02 |
| பைக்கல் | C ஹெய்ன்ஸ் b ஓரம் | 64 |
| லீ | N0t out | 15 |
| மக்ரா | N0t out | 03 |
| உதிரிகள் | | 08 |
| மொத்தம் 8 விக்கெட் இழப்புக்கு (50 ஓவர்கள்) | | 208 |

**பந்து வீச்சு - நியூசிலாந்து அணி**

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| பொண்ட் | 10 | 2 | 23 | 6 |
| அடம்ஸ் | 9 | 2 | 46 | 1 |
| வெட்டோரி | 10 | 1 | 40 | 0 |
| ஓரம் | 7 | 0 | 48 | 2 |
| ஹறிஸ் | 10 | 1 | 24 | 0 |
| ஸ்ரைரிஸ் | 3 | 0 | 18 | 0 |
| அஸ்ரல் | 1 | 0 | 8 | 0 |

**நியூசிலாந்து அணி**

| | | |
|---|---|---|
| வெட்டோரி | C கில்கிறிஸ்ட் b மக்ரா | 10 |
| பிளெமிங் | C கில்கிறிஸ்ட் b லீ | 48 |
| அஸ்ரல் | C பொன்டிங் b மக்ரா | 00 |
| ஸ்ரைரிஸ் | LBW b மக்ரா | 03 |
| ஹெய்ன்ஸ் | C லீ b பைக்கல் | 16 |
| வின்சென்ற் | C மாட்டின் b ஹார்வி | 07 |
| ஹறிஸ் | N0t out | 15 |
| மக்கல்லம் | LBW b லீ | 01 |
| ஓரம் | b லீ | 00 |
| அடம்ஸ் | b லீ | 00 |
| பொண்ட் | C & b லீ | 03 |
| உதிரிகள் | | 09 |
| சகல விக்கெட்டுக்களையும் இழந்து (30.1 ஓவர்கள்) | | 112 |

**பந்து வீச்சு - அவுஸ்திரேலிய அணி**

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| மக்ரா | 6 | 1 | 29 | 3 |
| லீ | 9.1 | 2 | 42 | 5 |
| ஹார்வி | 6 | 3 | 11 | 1 |
| பைக்கல் | 5 | 0 | 15 | 1 |
| ஹொக் | 4 | 0 | 11 | 0 |

96 ஓட்டங்களால் அவுஸ்திரேலிய அணி வென்றது.

எமது தன்னியக்க இயந்திரம் மூலம் (ATM) உங்கள் நடைமுறைக் கணக்கு, சேமிப்புக் கணக்குகளை 24 மணிநேரமும் செயற்படுத்த முடியும்.



கொமர்ஷல் வங்கி
உங்கள் நலமே எங்கள் நோக்கம்

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003
ICC Cricket World Cup South Africa 2003
SUPER SIX ஐந்தாம் நாள்
சிம்பாப்வே Vs கென்யா - GOOD YEAR PARK
BLOEM FOEMFONTEIN - 2 pm.

# கப்பல் அழிப்பு மிகப்பாரதூரமான...

உங்களுடைய பலத்தினை விமானப்படை, தரைப்படை என்று பலப்படுத்தி வருகிறீர்கள், இது நியாயமா?. நாங்கள் எவ்வளவு காலம் பொறுத்திருப்பது? இந்த சமாதானத்தால் யார் பாதிக்கப்பட்டது? எமது மக்களின் பலம் பாதிக்கப்படுகிறது. இந்த ஆயுதம் மக்களின் பாதுகாப்புக்குரியது. இந்த ஆயுதங்களை வைத்து நாங்கள் போராடி ஓர் பலம்மிக்க சக்தியாக இருந்தபடியால்தான் இந்தச் சிங்களதேசம் எம்மிடம் பேசவந்தது. உலகம் எங்களுக்கு அங்கீகாரம் தந்தது. இந்த ஆயுதம் எங்களிடம் இல்லையென்று வைத்துக் கொள்ளுங்கள், எங்களிடம் ஆயுத பலம் இல்லையென்று வைத்துக் கொள்ளுங்கள், இந்தப் பேச்சுவார்த்தை நடக்காது. ஆனால், இந்தப் பேச்சுவார்த்தை எம்மைப் பலவீனப்படுத்தும் ஓர் பொறியாக மாறக்கூடாது. இதில் நாங்கள் விழிப்பாக இருக்கின்றோம்.

**சிலந்தி வலைக்குள்...**

இந்த அரசாங்கம் அமெரிக்காவுடன் உடன்பாடு செய்து கொண்டுள்ளது. இந்தியாவுடனும் உடன்பாடு செய்து கொண்டுள்ளது. இந்த அரசாங்கம் சர்வதேச நாடுகளுடன் பல உடன்பாடுகளைச் செய்துள்ளது. ஒரு பக்கம் வர்த்தக உடன்பாடுகள், ஒரு புறம் பொருளாதார உடன்பாடு, மறுபுறம் இராணுவ ஒப்பந்தங்கள் என்றெல்லாம் ஒப்பந்தங்கள் செய்துள்ளது. இவையெல்லாம் எதற்கு? புலிகள் இயக்கத்தையும் தமிழர் தாயகத்தையும் சுற்றி ஓர் பாதுகாப்புச் சிலந்திவலை போடப்படுகின்றது. எங்களுக்குத் தெரியும். இதில் இந்தியாவின் பங்கு எவ்வளவிற்கு இருக்கின்றது என்றும், அமெரிக்காவின் பங்கு எந்தளவிற்கு இருக்கின்றது என்பதும் எங்களுக்குத் தெரியும். நாங்கள் முட்டாள்கள் அல்ல. ஆனால், நாங்கள் சமாதானப் பாதையில் உறுதியாக நிற்கின்றோம் என்று உலகத்திற்குக் காட்டிக் கொண்டிருக்கின்றோம். ஆனால் இந்தச் சமாதானம், இந்தச் சமாதானச்சூழல் எத்தகைய வலையை- ஒரு பொறியை- உருவாக்கும் என்பதும் எமக்குத் தெரியும். அதனால் நாம் விழிப்பாக இருக்கவேண்டும்.

**மக்கள் சமாதானத்தை விரும்புகின்றனர்**

இந்த சமாதானத்தை குலைக்கக் கூடாது. ஏனெனில், எமது மக்கள் சமாதானத்தை விரும்புகின்றார்கள். எமது மக்கள் சமாதானப் பாதையை விரும்புகிறார்கள். அமைதியை விரும்புகிறார்கள். அமைதி வழியிலான ஒரு தீர்வை விரும்புகிறார்கள். உங்களுக்குத் தெரியும், நாங்கள் இந்தப் பேச்சுவார்த்தைகளை நடத்தி எங்களைப் பலப்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்று சிங்களப் பேரினவாத சக்திகள் ரணில் விக்கிரமசிங்க அரசிற்கு எதிராகப் பிரசாரம் செய்து வருகின்றன. சிறிலங்கா சுதந்திரக்கட்சியும், ஜே.வி.பியும் சேர்ந்து பெரும் பிரசாரத்தை மேற்கொண்டு வருகின்றன. நாங்கள் அப்படியொன்றும் எம்மைப் பலப்படுத்தவில்லை. இவ்வளவு காலத்திற்குள்ளேயும் அவர்கள் ஓர் துப்பாக்கியைக் கண்டுவிட்டார்கள். எங்களிடம் ஆயிரமாயிரம் துப்பாக்கிகள் இருக்கின்றன. வேண்டுமென்றால் சிறிலங்கா அரசாங்கத்திற்கும் விற்கக்கூடிய துப்பாக்கிகள் எம்மிடம் உண்டு.

ஒரு யுத்தச் சூழ்நிலையில் நாங்கள் சிறிலங்கா இராணுவ முகாம்களைத் தகர்த்தெறிய முடியும். சிறிலங்கா இராணுவத்தின் இராணுவ, ஆயுத பலத்தை அழிக்க முடியும். அவர்களிடமிருந்து இராணுவ ஆயுதங்களைப் பெறமுடியும். வெளிநாடுகளிடமிருந்தும் ஆயுதங்களைக் கொண்டுவரமுடியும். அப்படி நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம். இறக்கியிருக்கிறோம். எமது பீரங்கிப்படகுகளை எதிர்கொண்டு பார்க்கப் பயத்தினால் சிறிலங்கா கடற்படை விலகி ஓடியது.

இவையெல்லாவற்றையும் விட்டு எங்களின் சொந்த மண்ணில் - தமிழீழக் கடற்பரப்பில் நாங்கள் எமது நடமாட்டத்தைக் குறைத்து எதிரிக்குக் கைகட்டிப் பணிந்து, அவனிடம் அடிவாங்கி, எமது போராளிகளைப் பலி கொடுத்து - எனினும் பொறுமையை இழக்காமல், நிதானத்தை இழக்காமல் அமைதிக்காக நாங்கள் செய்திருக்கின்ற தியாகம் அற்புதமானது. தயவுசெய்து விளங்கிக்கொள்ளுங்கள். எங்களிடம் பலம் இல்லையென்றோ அல்லது நாங்கள் பயந்தோ அமைதிக்கு வரவில்லை. தமிழ் மக்களுக்காக, இந்த உலகத்திற்கு உதாரணமாக விளங்குவதற்காக நாங்கள் இந்தப் போர்நிறுத்த உடன்பாட்டிற்கு வந்திருக்கிறோம்.

எம்மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன. இவர்களுக்கு அரசியற்தீர்வில் அக்கறையில்லை, இவர்கள் தமிழீழ இலட்சியத்தைக் கைவிடமாட்டார்கள், இவர்கள் பேச்சுவார்த்தை என்று சொல்லி உலகத்தை ஏமாற்றப்பார்க்கிறார்கள்- இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன. நாங்கள் செய்வது, நாங்கள் உலகமே ஏற்றுக்கொள்ளத்தக்க ஒரு தீர்வுத்திட்டத்தை முன்வைத்துள்ளோம். என்ன மாதிரியென்று சொன்னால், தலைவர் கடந்த மாவீரர் தின உரையில் ஓர் முக்கியமான வரலாற்றுப் பிரகடனத்தை வெளியிட்டார். அதை நீங்கள் படித்திருப்பீர்கள். அதாவது, நாங்கள், தமிழ் மக்கள் தமது தாயக நிலத்தில் வரலாற்று ரீதியாக, ஆண்டாண்டு காலமாக வாழ்ந்த தாயக மண்ணில் சுதந்திரமாக, கௌரவமாக, சமாதானமாக வாழக்கூடிய ஒரு சுயாட்சி உரிமையைக்கொண்ட ஒரு ஆட்சியமைப்பை விரும்புகிறோம். அப்படியான ஆட்சியமைப்புத் தரப்பட்டால் அதை நாம் பரிசீலனை செய்யத் தயாராக இருக்கிறோம். அதையும் சும்மா சொல்லவில்லை. சர்வதேச நியமங்கள், ஐநா. பிரகடனங்கள் போன்றவற்றிற்கு அமைவாகவே கூறினோம்.

இதில், தலைவர் உள்ளக சுயநிர்ணய உரிமை என்ற பதத்தைப் பாவிக்கிறார். உங்களுக்குத் தெரியும் உள்ளக சுயநிர்ணய உரிமை என்றால் என்னவென்று. ஒரு நாட்டில், இறையாட்சியுள்ள ஓர் நாட்டில்- ஒடுக்கப்படும் மக்கள், தங்கள் தாயக நிலத்தில் ஓர் சுயாட்சியை அமைத்துக்கொள்ளும் உரிமை. இதுதான் உள்ளக சுயநிர்ணய உரிமை. இதனடிப்படையில் நாங்கள் ஓர் தீர்வை ஏற்றுக் கொள்ளத்தயாராக இருக்கின்றோம், பரிசீலிக்கத் தயாராக இருக்கின்றோம் என்று கூறினோம்.

உள்ளக சுயநிர்ணய உரிமையை நீங்கள் தரமறுத்தால், நாங்கள் வெளியக சுயநிர்ணய உரிமைப் பிரகடனத்தைச் செய்து, பிரிந்து சென்று தனியாட்சியை அமைப்பதைத் தவிர எமக்கு வேறுவழியில்லை.

**உலகை நாம் ஏமாற்றவில்லை**

நாங்கள் உலகத்தை ஏமாற்றுவதற்காக இந்த சொற்பதங்களையோ சொற்சிலம்பாடல்களையோ கூறவில்லை. சர்வதேச உலகம் ஏற்றுக் கொள்ளக்கூடிய, சர்வதேச சட்ட நியமங்களுக்கு அமைவாக எமது கோரிக்கைகளை முன்வைக்கின்றோம்.

ஒருநாட்டு அரசு ஒரு சமஷ்டி ஆட்சிமுறையைத் தரமறுத்து, ஒடுக்குமுறையைத் தொடர்ந்து மேற்கொண்டால், நாங்கள் பிரிந்து சென்று தனியரசை அமைப்பதைத் தவிர வேறுவழியில்லை.

ஆனால், அரசு தனது மக்களை ஜனநாயகமுறையில் அரவணைத்து, அந்த மக்களுக்கு அரசியல் அங்கீகாரம் வழங்கி, பிரதிநிதித்துவம் வழங்கி, அவர்களை அரவணைக்கத் தவறினால்- அந்த மக்கள் பிரிந்து சென்று தனியரசைப் பிரகடனம் செய்யும் உரிமை உள்ளவர்கள் என்று ஐ.நா. சாசனங்களில் சொல்லப்படுகின்றது.

ஒரு மக்களினத்திற்கு சமத்துவ உரிமை மறுக்கப்பட்டு, அந்த மக்களுக்கு அரசாங்கத்திடம் இடம் இல்லையென்று சொன்னால், அந்த அரசிற்கு பிரதேச உரிமைப்பாடு இல்லை, இறையாட்சி உரிமையும் இல்லையென்று கனேடிய நீதிமன்றிலுள்ள சுயநிர்ணயம் பற்றிய கோட்பாடு கூறுகிறது.

**மனம் உண்டு, அதிகாரம் இல்லை.**

இதுவரை ஐந்து கட்டப் பேச்சுவார்த்தைகள் நிறைவடைந்துவிட்டன. ஆறாவது கட்டப்பேச்சுவார்த்தை இனி நடைபெறவுள்ளது. இந்தப் பேச்சுவார்த்தைகளின்போது, உள்ளார்ந்த பிரச்சினைகளை அரசாங்கத்தால் பேசமுடியுமா? இதில் முதலாவது விடயம், வடக்கும் கிழக்கும் இணைந்த தமிழர் தாயகம். இப்பொழுது கொழும்பு அரசு ஒரு தீர்க்கமான, ஒரு நிலையான, அரசியல் பாதையில் இல்லை. ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்திற்கு பெரியளவில் அதிகாரமில்லை. அவருக்கு மனமிருக்கிறது. அவருடன் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், மிலிந்த மொறகொட என்ற நல்ல அருமையான ஆட்கள் இருக்கிறார்கள். அவர்களுடன் பேசலாம். ஆனால் அவர்களிடம் அதிகாரம் இல்லை.

**சந்திரிகாவின் அதிகாரத்தில் கடற்படை**

அம்மாவின் கையில்தான் கடற்படை உள்ளது. அம்மாதான் கடற்படைக்குக் கட்டளையிடுகிறார். நெடுந்தீவில் என்ன நடந்தது? நாங்கள் பேர்ளினில் இருந்துகொண்டு பேசித் தீர்க்க முயற்சி செய்யும்போது, விட வேண்டாம்- புலிகளின் அந்த மீன்பிடிப்படகை கட்டியிழுத்துக் கொண்டு வா என்று அவர் உத்தரவு பிறப்பித்தார். அம்மா சொல்வதைத்தான் கடற்படை கேட்கிறது. கடற்படைத் தளபதி அம்மாவின் ஆள். அப்ப, நாங்கள் எப்படிப் பிரச்சினையைத் தீர்ப்பது. ரணில் விக்கிரமசிங்கவால் பிரச்சினையைத் தீர்க்கமுடியாது. இந்த நிலையில் நாங்கள் கனதூரம் ஓடமுடியாது.

**பலமற்ற அரசாங்கம்**

அதாவது - தமிழ் மக்களுக்கு சமஷ்டி, சுயாட்சி கொடுக்கக்கூடிய ஒரு புதிய அரசியல் யாப்பை இந்த அரசாங்கத்தால் கொண்டுவர முடியுமா? முடியாது. ஏனெனில், இந்த அரசிற்குப் பெரும்பான்மை இல்லை. எங்கட தமிழ் எம்.பிமார் இல்லாவிட்டால் அரசாங்கம் கவிழ்ந்திடும். இந்த நிலையில் எப்படிப் புதிய யாப்பைக் கொண்டுவரமுடியும். தமிழ்மக்களின் நீதியான, நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்ற அரசாங்கத்தினால் முடியாது. நாங்கள் தொடர்ந்து கேட்போம்.

உலகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கோரிக்கைகளை நாங்கள் கேட்போம். அம்மாவும் விடமாட்டார். அம்மாவிற்கு இன்னும் இரண்டு வருடம் இருக்கு. இந்த இரண்டு வருடத்திலும் அம்மா ஆடாத கூத்தெல்லாம் ஆடுவா. ஜே.வி.பியையும் ஏனைய இனவாத சக்திகளையும் இணைத்து அரசிற்கெதிராகப் பெரியதொரு ஆர்ப்பாட்டத்தை நேற்று (நேற்றுமுன்தினம்) நடத்தினார். நேற்று (நேற்றுமுன்தினம்) கொழும்பில் பெரிய ஆர்ப்பாட்டம். ஒரு லட்சம் மக்கள், தொழிலாளர்வர்க்கம் கிளர்ந்தெழுந்து சமாதானத்தை எதிர்க்கின்றனர்.

**ஒருவருடமாக நடந்தது என்ன?**

கடந்த ஒரு வருடமாக என்ன நடந்தது? ஆக முக்கியமாக பொருளாதாரத்தடை மட்டும் நீக்கப்பட்டது. அது முக்கியமான விடயம். என்றாலும், இன்னமும் பத்து லட்சம் இடம்பெயர்ந்த மக்கள் தங்கள் கிராமங்களுக்குச் சென்று குடியேறமுடியாத அவலநிலை இருக்கிறது.

இராணுவம் தங்களின் இடங்களை விட்டு விலகத்தயாராக இல்லை. ஏனென்றால் அம்மா விடமாட்டா. இராணுவம் விரும்பினாலும் அம்மா சொல்லுவா, போகவேண்டாம் என்று. இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்தக் கிராமங்களுக்குச் சென்று வாழ்வது அவர்களின் அடிப்படை உரிமை இது மறுக்கப்படுகிறது. இப்பொழுது நம்பியாரின் அறிக்கையைப் பார்த்துக்கொண்டிருக்கின்றோம்.

**சமாதான முயற்சியில் தொடர்கிறோம்.**

எவ்வளவு நெருக்கடிகளுக்கு மத்தியிலும், எவ்வளவு ஆத்திரமூட்டும் செயல்களின் மத்தியிலும் நாங்கள் இந்தச் சமாதான முயற்சிகளில் ஈடுபடுகிறோம் என்பதைத் தயவுசெய்து புரிந்துகொள்ளுங்கள்.

**என்னால் யாழ். வரமுடியாது**

என்னால் இப்போது யாழ்ப்பாணம் வரமுடியாது. நான் இரவல் 'கிட்னியை' பொருத்திக் கொண்டு இந்த உலகமெல்லாம் திரிகிறேன். எப்ப முடிகிறேனோ தெரியாது. நான் இங்ககூட வரமுடியாது. மலேரியா வந்தால் நான் சரி. அப்படியிருந்தும், நான் ஏன் இங்கு வருகிறேன், எதற்காக? பட்டம் பதவிக்காகவோ வருகிறேன்?

நாங்கள் வாறது உங்களின் நன்மைக்காகவே. எமது மக்களுக்குச் சமாதானம் வேண்டும். எமது மக்கள் கடந்த ஐம்பது வருடமாக ஏமாற்றப்பட்டு வந்திருக்கிறார்கள். இப்பொழுது நாங்கள் பலத்துடன் இருந்து ஒரு நியாயமான கோரிக்கையை முன்வைத்து அரசாங்கத்துடன், பேசிக்கொண்டு வருகிறோம்.

**ஒரே சக்தியாக**

தமிழ் எம்.பிக்கள், தமிழ்மக்கள் எல்லோரும் ஒன்றுதிரண்டு புலிகளுக்குப் பின்னால் அணிதிரண்டு, ஒரே இயக்கமாக, ஒரே தலைமைத்துவத்தின்கீழ் இயங்கும் ஒரு சூழல் உருவாகியுள்ளது.

தமிழினம் ஒரே சக்தியாக ஒன்றுபட்டிருக்க, சிங்களதேசம் முரண்பாடுகளைக் கொண்டுள்ளதுடன், அரசு இரண்டாகப் பிளந்து கிடக்கிறது. அப்ப நாங்கள் என்ன செய்வது?

**போரை ஆரம்பிக்கப் போவதில்லை**

நேற்று (நேற்றுமுன்தினம்) நடைபெற்ற சம்பவத்தை வைத்துக் கொண்டு யுத்தத்தை நாம் ஆரம்பித்திருக்க வேண்டும். ஆனால் நாம் யுத்தத்தை ஆரம்பிக்கவில்லை, ஆரம்பிக்கப் போவதுமில்லை. ஏன்? உங்களுக்காக, எங்களால் முடிந்தளவு பொறுமையைக் கடைப்பிடித்து வருகிறோம். ஆனாலும் பொறுமைக்கும் எல்லையுண்டு. குட்டக்குட்ட குனிபவனும் மடையன் என்று சொல்லுவார்கள். ஆகவே, நாங்கள் நிலைமையைப் பார்த்துக் கொண்டிருக்கின்றோம். உலகத்திற்கு எமது நிலைமையை முதலில் விளக்க வேண்டும். சிங்களதேசம் கடுமையான பிரசாரம் செய்து வருகிறது. நேற்று (நேற்றுமுன்தினம்) நடந்த சம்பவத்தை ஆயுதக்கடத்தல் என்று குற்றஞ்சுமத்துகிறார்கள்.

**போரை விட பேச்சுக் கடினம்**

பேச்சுவார்த்தை என்பது யுத்தத்தைவிட கஷ்டமான காரியம். நான் பிரபாகரனிடம் கேட்டேன், எனக்கு ஓய்வு வேண்டுமென்று. இருபத்தைந்து வருடமாக உங்களுடன் நான் இணைந்து செயற்பட்டு வருகிறேன். இனியாவது ஓய்வைத் தாருங்கள் என்று கேட்டேன். நான் யாழ்ப்பாணத்தில் போய், கள்ளை அடித்துப் போட்டு வேப்பமரத்திற்குக் கீழ் படுத்துக் கிடக்க என்று கேட்டேன். ஆனால் அதற்குப் பிரபாகரன் சொன்னார், புலிகள் இயக்கத்தில் எவருக்காவது ஓய்வென்று சொன்னால், அது மரணந்தான் என்று. அதோட நான் வாயை மூடிக்கொண்டு வந்துவிட்டேன்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையின் கருத்துக்களை உங்களோடு பகிர்ந்து, நாம் நேர்மையாக, உறுதியாக, நிதானமாக இந்த அமைதிமுயற்சியில் எமது மக்களுக்கு ஒரு கௌரவமான தீர்வைப் பெறுவதற்கு தொடர்ந்து முயற்சிப்போம் என்றார்.

**அமெரிக்க...**

நிறுவனப் பணிப்பாளர் சரோஜா சிவச்சந்திரன், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மாவட்ட இணைப்பாளர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தொடர்ந்து கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் மந்திராலோசனை நடைபெற்றது. இதன்போது, குடாநாட்டு நிலைமைகள் தொடர்பாக இவர்களுடன் கலந்துரையாடியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சந்திப்பின்போது, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், மாவை சேனாதிராஜா, ரவிராஜ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த விஜயத்தின்போது - யாழ். ஆயர், நல்லை ஆதீன முதல்வர் ஆகியோரைச் சந்திக்க எற்பாடு செய்யப்பட்டிருந்தபோதிலும் இறுதி நேரத்தில் இச்சந்திப்பு ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவருடன் தூதரத்தின் உயர் அதிகாரிகளான பெஸ்பேக், லோகே, நோவாக் மற்றும் இராணுவத்தரப்புப் பிரதிநிதி ஒருவரும் கலந்துகொண்டனர்.

(ச,ரா,60)

**தமிழீழ...**

திறந்துவைத்தார்.

மாவட்ட நீதிமன்றப் பெயர்ப்பலகையினை விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் பாலகுமார் திரைநீக்கம் செய்துவைக்க, மேன்முறையீட்டு நீதிமன்றப் பெயர்ப்பலகையை தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமரன் திரைநீக்கம் செய்துவைத்தார்.

**ஆசிரியர்கள்...**

கலந்துகொண்டனர்.

இவர்கள் - 'தொண்டர் ஆசிரியருக்கு அரசிடம் நிதி இல்லையா', 'தொண்டர் ஆசிரியர்கள் தகுதி இல்லாதவர்களா', 'வட-கிழக்கு மாகாண சபையின் அசமந்தப்போக்கே ஆசிரியர் நியமனங்களுக்குத் தாமதம்', 'வேறு அரச நிறுவன நியமனத்திறகு நிதியுள்ளது, எமக்கு நிதி இல்லையா?' - போன்ற சுலோகங்களை ஏந்தியவண்ணம் அமைதிப் பேரணியில் ஈடுபட்டனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கான மகஜரை, யாழ். மாவட்ட தமிழர் ஆசிரியர் சங்கச் செயலாளர் பஞ்சலிங்கம், தொண்டர் ஆசிரியர் சங்கத் தலைவர் இந்திரன் ஆகியோர் - மேலதிக அரசாங்க அதிபரிடம் கையளித்தனர். (60,ரா,கி)

## மரண அறிவித்தல்

### திருமதி கனகசபாபதி நாகரட்ணம்

திருமதி கனகசபாபதி நாகரட்ணம் 11-03-2003 செவ்வாய்க்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற கைலாசபிள்ளை கனகசபாபதியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சின்னத்தம்பி - அமிர்தலிட்சுமி தம்பதிகளின் அன்பு மகளும், விசாகரட்ணம், கருணானந்தன் (தோமஸ் FRANCE), திருமதி தர்மதேவி யோகநாதன் (அவுஸ்திரேலியா), நகுலேந் திரன் (சூட்டி), தவேந்திரம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத்தாயாரும், யோகநாதன் (அவுஸ்திரேலியா), கலாவதி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலம் சென்ற இராசமணி அருணாசலம் மற்றும் சி.கந்தையா (கனடா), சி.பரமானந்தம் (கனடா), திருமதி பத்மாவதி தங்கராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலம் சென்ற குழந்தைவேல், காலஞ்சென்ற குமாரசாமி, காலம் சென்ற யோகரட்ணம் மற்றும் யோகராஜா (SOUTH AFRICA), காலம் சென்ற யோகமணி ஆகியோரின் அன்பு மைத்துனியும், சுதர்சினி (அவுஸ்திரேலியா), திருவுளன் (அவுஸ்திரேலியா), சிவகுலன், கஜேந்திரன், திபேந்திரன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று 12-03-2003, அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் பிற்பகல் 4.00 மணிக்கு கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

71/17 சேர் பொன் இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.

(281)

ராஜா
யாழ்ப்பாணம்.
இன்று முதல் விக்ரம், லைலா நடித்த
தில்
நேரம்:- 10.30, 2.30, 6.30 மட்டும்
U. 571
13 வரை-இரவு 9.30. மட்டும்
(சி-628)

நிறைஞ்சனாஸ் சங்கானை
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
விஜயகாந், மீனா நடித்த
தேவன்
வெள்ளி. சனி. ஞாயிறு இரவு 8.45 மணி காட்சி
RUSH HOUR-2
(சி-627)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 12.03.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.